# ஊழிக்கொளி



வெளியீடு:

கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் [illegible] சங்கம்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு.........

மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வழங்கும்

# உன்னத சேவைகள்

* குறைந்த விலை,
* தரமான பொருட்கள்,
* பக்கட்டில் அடைத்த பொருட்கள்
* சுயமான விற்பனைத் தெரிவு,
* ஒரே இடத்தில் உங்கள் தேவைகளை நிறைவு செய்ய

நாடுங்கள்......

"சுயசேவை விற்பனை நிலையம்"

**"SELF SERVICE SALES CENTRE"**

சமையல் பிரச்சனையில் உங்களுக்கு உதவ
L. P. GAS விற்பனையும் நடைபெறுகிறது
**L. P. GAS 13 KG -- 290/-**
வெற்றுச் சிலிண்டர் வைப்புப்பணம் **1500/-**

எமது சொகுசு பஸ் சேவைகள் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு — கொழும்பு — | தினமும் காலை 8.00 மணி | |
| கொழும்பு — மட்டக்களப்பு — | தினமும் காலை 6.30 மணி | |

ஒரு வழிக் கட்டணம் — ரூபா. **80/-**

**மட்டக்களப்பு ப. நோ. கூ. சங்கம்,**

150, திருமலை வீதி, மட்டக்களப்பு.

☎ 065 — 2111

# கிழக்கொளி

(கலை, இலக்கிய காலாண்டுச் சஞ்சிகை)

ஒளி: 2    வைகாசி -- ஆடி 93    கதிர்: 3



பிரதம ஆசிரியர்:

எஸ். எஸ். சூரியகாந்தன்

இணை ஆசிரியர்கள்:

க. ராஜகோபால்
எஸ். ராஜ்மோகன்

பூ. லோகராஜா

ஆசிரிய பீட உறுப்பினர்கள்:

G. A. மோசஸ்

சி. ஸ்ரீஸ்கந்தராசா


தனிப்பிரதி விலை: 15/-

ஆக்கபூர்வமான கட்டுரைகள், கதைகள், கவிதைகள் போன்றவற்றை ''கிழக்கொளி'' உங்களிடமிருந்து வரவேற்கிறது. தங்கள் தரமான கனமான ஆக்கங்கள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.


தொடர்பு:

''பிரதம ஆசிரியர்''
''கிழக்கொளி''
விவசாய பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்,
செங்கலடி.


## விடய அடக்கம்


01) உயர் கல்வி ...03

02) கண்ணகி வழக்குரையில் கண்ணகி ...08

03) மெழுகுவர்த்தி எரிகின்றது ...10

04) கவிதை ...12

05) உமது சூழலைத் தெரிந்து ...13

06) மலர்ந்தும் மலராத ...18

07) இரங்கற்பாக்கள் ...19

08) இலங்கையின் கல்வி ...20

09) உறவு என்னும் உலகங்கள் ...24

10) நாட்டார் வாயில் நயம் ...26

11) குறுக்கெழுத்துப் போட்டி ...27


அடுத்த இதழில்

செல்வி. அருந்ததி சபாநாதன் எழுதும்

ஓவியம்: அடிப்படை அம்சங்களும் இரசித்தலும்.


கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்க வெளியீடு-



# நுழைவாயில்

முத்தமிழ் வித்தகர், பல்கலைக்கழக முற்றமிழ்ப் பேராசிரியர், தமிழுலகிற்கு ஒளியூட்டிய மணிவிளக்கு, ஈழத்தின் ஞானக்கொழுந்து. இலக்கணம், இலக்கியம், விஞ்ஞானம், சமயம், தருக்கம் முதலிய விடயங்களை மக்களுக்கு வழங்கிய கற்பகதரு, பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பேரறிஞன், தமிழ்ப் பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும் புத்துயிர் அளித்து வந்த தொண்டன், தமிழுலக அறிவுச் சுடர், காரேறுமூதூர் தந்த தவப்புதல்வன் அருட்டிரு சுவாமி விபுலாநந்தர் மறைந்து 46 வருடங்கள் மறைந்துவிட்டன. கடந்த வருடம் கூட அவர் பிறந்த நூற்றாண்டு விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்னாரது 46வது சிரார்த்ததினம்கூட அண்மைக்காலங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. எல்லாம் மேடையிலும், ஏட்டிலும் தானேதவிர எதுவும் நடைமுறையில் இல்லை. கிழக்கின் விடிவெள்ளியாகத் தோன்றிய சுவாமி பிறந்த மட்டக்களப்பிலே மட்டுநகர் புகழ்பேச சுவாமியைப்போல் எவரும் சாதனை புரியாமல் இருப்பது மனம் வருந்தத்தக்கது. சாதனை புரியாவிட்டாலும் பரவாயில்லை: வேதனை தராமல் இருந்தாலே போதும், அலுவலகங்களை எடுத்துக்கொண்டால் அங்கு கடமைகள் ஒழுங்காகப்பேணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களை தினசரிகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன, நாம் சதையில்லாத, கூடாத நண்டுகளைத்தான் 'ஊழல் நண்டு' என்று பெயரிட்டழைப்போம். ஆனால் தற்போது நண்டுகளில் ஊழலில்லை! அவை நம்மிடையே குடிவந்துவிட்டன. காலப்போக்கிலே நண்டுகளுக்கு பேசும்திறன் வந்துவிட்டால் அவை மனிதனைப்பார்த்து ''ஊழல் மனிதன்'' என்று நிச்சயம் கூறத்தான் போகின்றது. இந்த ஊழல்களையும். வீண் விரயங்களையும் இல்லாதொழிக்க உயர் அதிகாரிகள் எவ்வளவு திடசங்கற்பம் பூண்டும் அவற்றை இல்லாதொழிக்க முடியாமல், அவர்களும் அவற்றிற்கு அடிமையாக வேண்டிய சூழ்நிலையும் உருவாகின்றது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுகினால் இவற்றை ஓரளவுக்கு குறைக்கலாம். ''அவன் செய்கிறான்': இவன் செய்கிறான்'': ''நான் செய்தால் என்ன?'' என்ற நினைப்பே இன்று நல்லவர்களையும் தீயவழிக்கிட்டுச்செல்கிறது. ''மற்றவன் கெட்டால் பறவாயில்லை! நான் திருந்தவேண்டும்; நான் திருந்தினால்தான் மற்றவன் திருந்துவான்!'' என்ற நினைப்பு சகலரினதும் மனதுள் உதயமாக வேண்டும்.

''காலம் பொன்னானது; கடமை கண்ணானது'' என்ற அறிஞர் வாக்குகளை கருத்திற்கொண்டு கடமையைக் கண்ணென மதித்து நாம் செயற்பட்டால் இந்த உலகம் திருந்திவிடும், ஊழல், வீண் விரயம் போன்ற அரக்கன்களை அழிக்க எந்த தெய்வீக அவதாரமும் தேவையில்லை. நம் மனவுறுதியே போதும்.

- ஆசிரியர்

# "உயர்கல்வி"

**கலாநிதி. ப. வே. இராமகிருஷ்ணன்**
கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைகழகம்.

தொடர்ச்சி

பகிடிவதை காரணமாக தண்டனை விதிக்க வேண்டுமெனக்கங்கணம் கட்டிய போது இலக்கியம் படித்த சகவிரிவுரையாளரொருவர்'வளர்த்தெடுப்போம்'' என்றார். புரிந்துணர்வின்மையால் தோல்வியடைந்த நிலை. மூன்று அல்லது நான்கு வருடங்கள் எமது வழிகாட்டலில் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை பக்குவமடைந்தவர்களாய் வளர்த்தெடுப்பதே எமது தலையாய பணியென்பதை வலியுறுத்தவே இதனைக் கூறவேண்டியதாகிறன்றது.

அறிவு என்பது பௌதிகமென்றோ சமூகவியலென்றோ அல்ல மிருகவியலென்றோ கூறுபோட்டுக் கற்பிக்கும் விடயமட்டுமல்ல. ஒன்றிணைந்தது. முழுமை வாய்ந்தது. அறிவை நாடி நிற்பதென்பது புனிதமானதோர் முயற்சி. வள்ளுவரது வாக்குக்கேற்ப சென்ற இடமெல்லாம் சிறப்பு இருக்க கல்லாதவாறு இருப்பதேன் எனும் அளவுக்குக் கேள்வி எழுப்பக் கூடியதாக பக்குவப்படுத்தப்பட்ட மனம். அதன் அழகு முகத்தில் தெரியுமெனும் அளவுக்கு விரும்பத்தக்க திசையில் மாற்றம் ஏற்படுகின்றது குறித்த இக்கால கட்டத்துள், கணிசமான அளவு மாற்றம் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் இவன் கற்றவன் என இனங் காணக் கூடியதாக இருக்கும். ஒருவகை ஆன்மீக ரீதியான முன்னேற்றம். தன்னையும் உணர்ந்த நிலையில் தனக்கென வகுத்துக் கொண்ட துறையைப் பற்றி கசடறக் கற்க முயலுகின்றான். உண்மையை அறிந்து கொள்ள எத்தகைய ஆய்வு முறைகள் அதற்குரிய உடற்பக்குவம் உளப் பக்குவம். சாதனைகள் எத்தகையது. தனது அறிவின் எல்லையை உணர்ந்த காரணத்தால் ஒரு வகை அடக்கம் தெரியும் என்றால் நிச்சயமாகத் தெரியும் என்பதாகும். இதனால் திடநம்பிக்கை, ஆணித்தரம் அவன் கூறுவதை ஏற்கலாம் எனும் நம்பிக்கை பிறர் மத்தியில். சமூகத்தின் செலவில் கல்வியெனும் காரணத்தால் கட்டுப்பாடு பொறுப்புணர்ச்சி. இவற்றின் தொகுப்பை அறியும் ஆவலோடு சமூகப் பற்றுமாய் மலர்கின்றது. கற்றதனால் ஆன பயன் என்சொல் எனக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாது. இத்தகைய பட்டதாரியின் கையில் பொறுப்பையும் அதிகாரத்தையும் நம்பிக்கொடுக்கலாம். இடுப்பில் கைவைத்த வண்ணம் நிற்க மாட்டான். அத்தராத்திரியில் குடை பிடிக்க மாட்டான். செழுங்கிளை தாங்கி நிற்க முன் வருவான். இத்தகைய பட்டதாரிகள் நூறிரு நூறென வருடாவருடம் பல்கலைக்கழகங்களிருந்து வெளியேறினால் நாடு செழிக்காது விடுமா? அவர் பொருட்டு எல்லோர்க்கும் மழை பெய்யுமல்லவா.

எவ்வித சூழலில் எவ்வித கல்வி என்பதும் தொடரும் பரிசீலனையாக இருத்தல் வேண்டும். காலத்தால் இலட்சியங்கள் மாறுவதில்லையென்பது உண்மைதான். ஆனால் அரசியல்,பொருளாதார சமூகச் சூழல் மாறிய வண்ணமேயிருப்பதால்இலட்சியங்களை அடைவதற்குரிய கல்வியும் காலத்துக்குக் காலம் பரிசீலனைக்குரியதாக வேண்டும். அறியும் ஆவலை மங்க விடாதிருப்பதற்கும் பொறுப்புணர்ச்சியோடு சமூகப் பற்றும் தளராது இருப்பதற்கு சமூகத்தோடு மாணவ சமூகமும் சங்கமமாகி வளர்ச்சியடைவதற்கு எத்தகைய

கல்வி என்பதுவே தொடர் ஆய்வுக்குரியதாக வேண்டும். சமூகத்தில் நிறைவைக் காண இருக்கும் மாணவ மாணவிகளை சமூகத்திலிருந்து ஒரு மூலையில் ஒதுக்கி வைப்பதென்பது யதார்த்தத்துக்கு முரணாய் அமையும். வழிப்போக்கன் வந்து ஆறுவதற்கு உகந்ததென்பது ஒன்று நாம் கல்விக்கென வகுத்த இலட்சியத்தை அடைவிப்பதற்குரிய சூழல் என்பது இன்னொன்று. குடிபெயர்ந்து சென்ற உடன் பிறப்புக்களும் மீண்டும் வந்து ஒன்று சேர வழிவகுக்கக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். மேலும் வேகமாய் மாறிச் செல்லும் உலகில் ஒதுக்குவதை எதிர்க்கும் நாம் ஒதுங்கிக் கொள்வதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

உயர் கல்வியோ பெருஞ் செலவுக்குரியது அரசாங்கத்தையே நம்பி வாழவேண்டியிருப்பதால், நிதி ஒதுக்கலும் அரசியல் செல்வாக்கைப் பொறுத்ததாய் இருக்கிறது. பேராதனை, கொழும்பு, உருகுணை என்பவைக்கெல்லாம் செல்லப்பிள்ளை அந்தஸ்து. நமக்கோ முன்னைய பள்ளிக்கூடங்களும், கராஜ்களும் நெல்மூட்டையடுக்கும் ஆலைகளும் வழிகாட்டிகளாக இருப்பதற்கு சிரேஷ்ட ஆசான் ஒருவரும் உதவிக்கு ஒரு குட்டி ஆசிரியரும் - பிச்சை போட்டாப்போல. நிலைமை இவ்வாறிருக்க, ஏனைய பல்கலைக்கழகங்களது தரத்தையடையவும் வேண்டியிருக்கின்றது. அல்லாவிடில் நாம் கொடுக்கும் பட்டங்களுக்கு மதிப்பில்லாது போய்விடும்.

குறைந்த தொகை மாணவர்கள். ஆகவே, அதற்கேற்ப குறைந்த தொகை விரிவுரையாளர்களும் வசதிகளும் என்பதாயுள்ளது திட்டமிடும் அதிகாரிகளது வாதம். ஆனால், பட்டப்படிப்புக்குரிய பாடத் திட்டமோ மாணவர் தொகையளவு குறைவதாக இல்லை. பேராதனை கொழும்பைப்போல் அல்லாது அதே பாடத்திட்டத்தை குறைந்தளவு விரிவுரையாளர்களது தொகையைக் கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கின்றது, இது நாம் கொடுக்கும் பட்டங்களது (degree) தரத்தை நிச்சயமாகப் பாதிக்கும் - பாதிக்கவும் தொடங்கிவிட்டது. பேராதனையில் குறித்த ஒரு துறையில் 10 பி. எச்டி பெற்றுள்ள விரிவுரையாளர்கள் இருப்பார்களாயின் எமக்கு 1 பி.எச்டி பட்டதாரி மட்டும் இருப்பார். (சில துறைகளில் அதுவும் இருக்காது. அரை விரிவுரையாளரோடும் சமாளிக்க வேண்டியிருக்கிறது.)

இதனால் விரிவுரைகள் தயாரிப்பதில் களைப்பு, அலட்சியம் தகுதியின்மை ஏற்படுவதற்கு இடமுண்டு. தனது விரிவுரைகளது தரத்தை உயர்த்த விரிவுரையாளர் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். ஆனால், நேரமில்லை வசதிகளில்லை, உயர் பயிற்சியுமில்லை. ஆனால் இவர்களிடம் பயிற்சி பெற்றுவெளியே செல்லும் மாணவர்கள், பேராதனை கொழும்பு பட்டதாரிகளோடு தொழில் வாய்ப்புக்களுக்குப் போட்டிபோட வேண்டும், தரக் குறைவு எனும் காரணத்தால் வாய்ப்புக்கள் எட்டாது போய்விடும். தமிழ்மூலம் கற்பிக்கும் பள்ளி ஆசிரியர்கள் தொழிலே வழங்கப்படும். நிலைமை இவ்வாறு இருக்கும்போது, எமது பட்டதாரிகளது கதியோடு பள்ளி மாணவர்களது கதியும் சங்கமமாகிவிடும். சந்ததி சந்ததியாக தரம் குறைக்கப்படும். இது நேற்று இன்றுஎனஆரம்பித்தபோக்கல்ல. இதற்கு முப்பதுவருட வரலாறுண்டு. முன்பு கலைப் பிரிவுக்கு மட்டும் இப்பாதிப்பு (பல துறைகளில் பி.எச்டி பட்டம் பெற்ற விரிவுரையாளர்கள் இல்லை) இன்று யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பித்தபின் விஞ்ஞானம் சம்பந்தமான துறைகளும் விரைவில் பாதிக்கப்படும் ஆபத்துக்குள்ளாக இருக்கின்றன. (தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட முஸ்லிம் சமூகமும் இதனால் பாதிக்கப்படும்) காலஞ் செல்லச் செல்ல தரமான கல்வி பெற்றவர்களுக்கும் தரங்குறைந்த கல்வி பெற்றவர்களுக்குமிடையே ஏற்படும் தர வேறுபாடு பெருகிக்கொண்டே போகும். நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர் கல்வித் தராதரம் குறைந்தவர்கள் எனும் காரணத்தால், தொழிற் துறை வேலை வாய்ப்

புக்களினின்றும் ஒதுக்கப்படுவர். அக்கட்டத்தில், பாகுபாடென்றோ அநியாயமென்றோ குற்றஞ்சாட்டயியலாது.

கல்வி பற்றிய மீளாய்வு செய்ய முயலும் நாம் பிரச்சினையை இரு வகையில் அணுகலாம்:-

1. பல்கலைக் கழகக் கல்வி பற்றிய அடிப்படை நோக்கங்களை விமர்சிக்காது இன்றைய அமைப்பில், தரத்தை எப்படி உயர்த்தி பேராதனை கொழும்பின் மட்டத்துக்குக் கொண்டுவரலாம்.

2. பல்கழைக்கழகக் கல்வி எதற்கு எனும் அடிப்படைக் கேள்வி.

1. முதற் பிரச்சினை இன்றைய கல்வி முறைக்குட்பட்டது இங்கு உட்பிரிவுகள் இரண்டு.

(அ) சமவாய்ப்புக்களை வலியுறுத்தல் வேண்டும். வைத்தியம் பொறியியலாகிய துறைகளில் படிக்கும் வாய்ப்புப் பெற அநுராதபுர, பொலநறுவை மாணவர் களைவிட நிம்மதியற்ற சூழலில் படித்துவரும் யாழ்ப்பாணத்து மாணவன் 110 புள்ளிகளும் மட்டக்களப்பு மாணவன் 70 புள்ளிகளும் கூடுதலாய் பெற வேண்டியிருக்கின்றது. பாகுபாடு நிறுத்தப்படவேண்டும்.

மாணவர் தொகைக்கேற்ப விரிவுரையாளர் தொகையென திட்டமிட்டுத் தரம் குறைக்க முயலுவதை பகிரங்க விவாதத்துள்ளாக்கி அதன் விஷமத்தனத்தை வெளிப்படுத்த வேண்டும். அமைதியின்மை காரணத்தால் கட்டட வசதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது எனும் போக்கு நிறுத்தப்பட வேண்டும். மட்டக்களப்பில் கலைப்பீட மாணவர் தொகை கூடிக்கொண்டு வரும் வேளையில் இடவசதிகளில்லை. நூலக வசதிகளில்லை (மறுபுறத்தில் செலவு கூடிய விஞ்ஞான பீடங்களில் மாணவர் தொகை குறைந்து கொண்டே போகின்றது. உதாரணமாக விவசாய பீடத்தில் மாணவரது மொத்தத்தொகை 37 மட்டுமே. இந்த வருடம் 11 மாணவர்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளனர். விரைவில் இப்பீடத்தின் அவசியமென்ன எனும் பிரச்சினையை எழுப்பி மூடவும் வைக்கலாம்.)

ஆ) வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அதாவது பயிற்சி பெற்ற விரிவுரையாளர் தட்டுப்பாடு, சொற்ப நிதி ஒதுக்கல், கட்டட நூலக வசதியின்மை, சுற்றாடலில் அமைதியின்மை - நாம் என்ன செய்யலாமென நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றுவது.

நமக்கோ பத்து வருட வரலாறு மட்டுமே பேராதனை கொழும்பு போன்ற பல்கலைக்கழகங்களுக்கு 50 வருட வரலாறு உண்டு. அவற்றை கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றி அனுபவம் பெற்ற சர் ஐவோர் ஜெனிங்ஸ் (*Sir Ivor Jennings*) என்பவர் முதல் துணை வேந்தராக கடமைபுரிந்து தொடக்கிவைத்ததனால் அவற்றுக்கென ஒருபாரம்பரியமுண்டு. (*qradition*) மூதவையில் (உயர் ஆராய்ச்சிப் பயிற்சியும் முதிர்ச்சியும்மடைந்த) பேராசிரியர்களைக் கொண்டே கூட்டம் பல்கலைக்கழக அன்றாட விடயங்களோடு எதிர்காலம்பற்றிய கல்வி வளர்ச்சி சம்பந்தமான விடயங்களையும் நிதானமாக ஆராயும். ஆளையாள் மதிக்கும் புரிந்துணர்வு - இது, பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வழமையாக்கப்பட்டு விட்டது. பல துறை நிபுணர்கள் கூட்டாகவும் நிதானமாகவும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாகையால் நடைமுறைப் படுத்துவதில் ஆர்வம் இதனால் சாதனைகள் பல, இதுவே ஒரு பல்கழைக்கழகத்தின் பாரம்பரியம். அவ்வித பல்கலைக்கழகங்களது அனுபவங்களைக் கொண்டு நாமும் தகுதியுள்ள. பல்கலைக்கழக சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இன்று வித்திட்டால் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் பெரும் விருட்சம். விளையும் பயிரை முளையில் தெரியுமென்பார்கள்.

விரிவுரைகளும் வெறுமனே தகவல் கொண்ட குவிப்பாயிராது. பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் வழிமுறைகள் - அவற்றின்

அடிப்படை கொள்கைகளும் (*Theories*) அவற்றின் குறை நிறைகளும், இலக்கியம் தத்துவம் நுண்கலைகள், முதலியவற்றில் படைப்பாசிரியர்களது கற்பனைத் திறன்பொருள், அழகு முதலியன வற்புறுத்தப்படும். மாணவரை ஆய்வுத்துறையில் ஈடுபடுத்த உரையாடல்கள், கருத்தரங்குகள், வெளியார் சொற்பொழிவுகள், நூல்களைப்படிப்பதற்கு ஆறுமாடிக்கட்டடத்தைக் கொண்ட நூலகம் விஞ்ஞான மாணவர்களுக்கு தரமுள்ள ஆய்வுக்கூடங்கள்'

ஆராய்ச்சியே பல்கலைக்கழகத்தின் மூல பணியாகுமென்பார் ஜெனிங்ஸ் அவர்கள். ஆசிரியர் தான் படித்துக்கொண்டிருக்கும் முயற்சியில் படிப்பித்தலை உள்ளடக்கவேண்டும். மாணவரும் படிக்கும் போது படிப்பது எப்படி புது விடயங்களை அறிவது எப்படி என்பதையும் படிக்கவேண்டும்.

(அல்லாவிடில்? வெவ்வேறு துறைகளில் அறிவு வளர்ச்சியின் வேகத்துக்கு நாம் நின்று பிடிக்கமுடியாது போய்விடும். மாணவர்களுக்கு வெறும் பழசையே விநியோகிக்க நேரிடும். பின் தங்கிய நாடு, பின் தங்கிய பிரதேசம் என்பதோடு பின்தங்கிய ஆசிரியர்களெனும் முத்திரைகளும் குத்தப்படும். இதனால் நாம் கொடுக்கும் பட்டங்களுக்கும் மதிப்பிராது.)

விரிவுரைகள் மட்டுமல்ல மாணவர்கள் தாமாகவே நூலகத்தில் ஆறுமணிநேரமளவில் படிக்க வேண்டும். இசைத்துறையில் இரண்டு வாத்தியங்களாகுதல் வாசிக்க தெரிய வேண்டும். கூட்டாக விளையாடிய உடற்பயிற்சி தேவை. தமக்கிடையே இன்பமாக உரையாடி மகிழும் பக்குவமும், எதிர்பாலாருடன் கண்ணியமாகப் பழகுதல். இவற்றையே தனது முதல் பட்டமளிப்பு உரையில் வற்புறுத்தினார். ஜெனிங்ஸ் அவர்கள்

இன்று, திட்டமிடுவோர், பல்கலைக் கழகங்களை வெறுமனே சொல்லிக் கொடுக்கும் உயர் பள்ளிக்கூடங்களாகக் கருதிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இதனாலேதான் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அற்பத்தனமான பாகுபாடு முன்னேற்றத்துக்கு முண்டுகொடுத்து உதவும் அறிவாலயங்களாகக் கருதப்படுமேயானால், நாடு செழிக்கும் அதனோடு பல்கலைக்கழகங்களும் செழித்து வளரும்.

2. பல்கலைக்கழகம் எதற்கு என்பது ஓர் அடிப்படைப் பிரச்சினை ஆய்வு. சில சட்ட திட்ட எல்லைக்குள் நாமே சுயமாக நடத்தும் உரிமை வழங்கப்படும் போது, இவ்விடயம் பற்றி ஆராய்ந்த வண்ணமே இருப்பது பல்கலைக்கழக வளர்ச்சிக்கு அவசியமாகும்.

வீடு, வயல், தோட்டம் முதலிய சொந்துக்களைப்போன்று கல்வியும் ஒரு நம்பிக்கைச் சொத்து. இதுவரை சேமித்து வைத்த அறிவை மேலும் வளர்க்க அடுத்த சந்ததியிடம் ஒப்படைத்துச் செல்வது பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய எமது தலையாய கடமையாகும். அறிவை வளர்க்க சுதந்திரம் தேவை. (மன்னவனும் நீரியா) எனும் ஆணித்தரம் வேண்டும் இது கடமையுணர்வினால் எழும் கண்ணியம் தேடித் தரும் உணர்வும் உரிமையும்.

அறிவு என்பது உண்மை சம்பந்தமானது. உண்மை ஏட்டளவில்லை. நடைமுறைச் சாத்தியமானது. தர்மத்தோடு இணைந்தது. இங்குதான் அறிவாளி சமூகத்தோடு சங்கமமாகிறான். சமூக முன்னேற்றத்தி னின்றும் அறிவு விலகிய விடயமல்ல. பொருளாதாரத்தோடு, கலை கலாச்சார மென்பனவும் அறிவோடு பின்னிப் பிணைந்ததாய் இருக்கும். இதனை வளப்படுத்த பக்குவப்பட்ட பட்டதாரியும் பயிற்றப்படுகிறான்.

தனியார்மயப்படுத்தல் எனும் கொள்கை மேலோங்கிக்கொண்டு வரும் இந்நாட்களில் இளம் சமுதாயமும் சமூக நியமங்களுக்குட்பட்டதாய் நவீன அறிவியல், தொழில்நுட்பம், முகாமைத் திறன் கொண்டவர்களாய்

இருத்தல் வேண்டும். தாம் வாழும் நாட்டை நேசிப்பவர்களாக தம் சமூகத்தை மதிப்பவர் களாக இருத்தல் வேண்டும்.

தமிழ்த்தாய் வணக்கம் செலுத்துகிறோம் அதே வேளை தமிழ்மொழியில் நிருவாகம், அறிவு வளர்ச்சியென்பவற்றைப் பற்றிய ஆய் வும் சாதனைகளும் தேவை. இறவாத புகழு டைய புது நூல்கள் பிற நாட்டு நல்லறி ஞர்கள் சாஸ்திரங்கள் தமிழில் மொழி பெய ர்த்தல், என்று கனவு கண்டார். சுப்பிரம ணியபாரதி. பல்கலைக் கழகத்தை அண்டி யுள்ள பள்ளிக் கூடங்களது தரமும் உயர்த் தப்பட வேண்டும். தமிழ், ஆங்கிலம், விஞ் ஞானம், சமூகவியல், வர்த்தகம் முதலிய பாடங்கள் பற்றிய அண்மைக்காலத் தகவல் கள் கொள்கைகள் கற்பிக்கும் முறைகள் போன்ற கருத்தரங்குகள் நல்விளைவுகளை ஏற்படுத்த உதவும்.

சமூகத்திலுள்ள திறமைசாலிகளே பல்க லைக்கழகப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படு கிறார்களெனப்படுகிறது, அவர்களூடாக அறி வியல், தொழில் நுட்பம், நுண்கலைகள் மீண் டும் மக்களிடம் செல்கிறது நாடும் செழிப் படைகிறது என்பார்கள். இது இலட்சியம் குறிக்கோள் ஏற்புடையதாகையால் மறுப்ப தற்கில்லை. இவ்வித கருத்துப் பின்னணியி லேயே ''பல்கலைக்கழகம் எதற்கு'' எனும் கேள்வி எழுப்பப்படவேண்டும். இதுவெறுமனே கேள்வியல்ல. ஒரு வகை உளப்பாங்கைக் கொண்ட அணுகு முறை. தொடர் ஆய்வுக் குரியது. விவாதத்துக்குரியது. சர்ச்சைக்குரி யது. ஆனால் இது நிதானமாகவும் புரிந்து ணர்வோடும் நடத்தப்பட வேண்டிய பணியாகும்.

## கொடி பறக்கட்டும்

*எழுதியவர்:*
**சாம் – சாறா**
*131 ஏ, பார்வீதி*
*மட்டக்களப்பு.*

வெள்ளை உடை உடுத்தி
வீதிவழியினிலே சமாதான
புறாக்களாக வலம் வரும்
என் இனிய தோழர்களே
கூடு திரும்பியதும் – நீங்கள்
போர்முரசு கொட்டும்
வல்லூறுக்களாக மாறுகின்ற
மாயந்தான் என்ன?
சொல்ல முடியவில்லையா?
இது என்ன வெளி வேடம்
வெள்ளை கொடி உங்கள்
கூட்டினிலும் பறக்கட்டும்

# 'கண்ணகி வழக்குரை' யில் கண்ணகி

— செ. யோகராசா எம். ஏ —

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானதொன்று. இவ் வழிபாடு பற்றிக் கூறும் பல நாட்டார் இலக்கியங்கள் மட்டக்களப்பிலும் பிற பிரதேசங்களிலுமுள்ளன. மட்டக்களப்புப் பிரதேசக் கோயில்களில் கண்ணகி விழாவின் போது படிக்கப்படும் நூல் என்ற விதத்தில் கண்ணகி வழக்குரை குறிப்பிடத்தக்கது; மட்டக்களப்பில் கண்ணகி விழாக்கள் ஆரம்பித்துள்ள இவ் வேளையில் கண்ணகி வழக்குரையில் இடம்பெறும் கண்ணகி பற்றி கவனிப்பது பொருத்தமுடையதாகும்.

கண்ணகி வழக்குரையிலே பதினொரு காதைகள் உள்ளன. இவற்றுள், வரம்பெறும் காதை (அ. அம்மன் பிறந்த கதை), பொன்னுக்கு மதிப்புக் காதை (அ. பொன்னுக்கு மதிப்பு)வழிநடைக் காதை(ஆ.வழிநடை), அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை(அம்மன் கனாக் கண்ட காதை), வழக்குரைத்த காதை குளிர்ச்சிக் காதை (அ. குளிர்ச்சி, ஆ. வழக்குரை காவியம்) என்பன கண்ணகி பற்றி அறிவதற்கு உதவுகின்றன.

மேற்கூறியவற்றுள், அம்மன் பிறந்த கதையில் இடம்பெறும் விடயமொன்று. தெய்வ பெண்ணான - பரராசமுனிவரது மகளான கண்ணகி மாங்கனி உருவில் பூவுலகில் வந்து பிறப்பது பற்றிக் கூறப்படுகிறது. கண்ணகியின் கற்பு முதலான நற்குணச் சிறப்புக்களை உலகிற்கு உணர்த்த சிவன், கண்ணகியைப் பூவுலகிற்கு அனுப்புகின்றார். பாண்டியன் செருக்கடக்கும் பொருட்டு உமையும் அத்தகைய அவதாரம் பற்றி வற்புறுத்துகின்றாள். இரு நோக்கங்கள் இங்கு நிறைவேறுகின்றன. சிலப்பதிகாரம் கூறும் ''உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்'' அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்'' ஆகிய இரு நோக்கங்களும் நிறை' வேறுகின்றன என்றும் கூறலாம். ஆயினும் இங்கு நாம் வலியுறுத்த விரும்புவது அதுவன்று சிலப்பதிகாரம் மனிதப் பெண்ணான கண்ணகியைத் தெய்வப் பெண்ணாக்க முயல, கண்ணகி வழக்குரை, தெய்வப் பெண்ணான கண்ணகியை மனிதப் பெண்ணாகச் சித்தரிக்க முற்படுகிறது என்பதே நாம் மனங்கொள்ள வேண்டியதாகும். இதற்கு, அம்மன் பிறந்த கதை அடிப்படைச் சான்றாக விளங்குகின்றது.

மனிதப் பெண்ணாகிவிட்ட கண்ணகியை இனிவரும் பகுதிகள் உயர் பண்புகள் பொருந்திய குடும்பப் பெண்ணாகக் காட்ட முற்படுகின்றன. பொருள் குன்றிய நிலையில் கோவலன் (சித்ராபதியின் செயல் காரணமாக)மாதவியிடம் அவமானப்படுகின்றான். இந்நிலையில், தன் கணவனுக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்க முற்படுகின்றாள். கண்ணகி; தான் மாதவி வீட்டிற்குப் பொன்கொடுத்து அனுப்புகின்றாள் ''பொன்னுக்கு மதிப்பு' இத்தகைய கண்ணகியைக் காட்டுகின்றது.

கோவலனுக்கு சிலம்பு விற்கும்படி ஆலோசனை கூறும் கண்ணகியையும், (வழிநடையின் போது) அச்சமும். அப்பாவித்தனமும் உடைய கண்ணகியையும் வெளிப்படுத்துகின்றது 'வழிநடை'

அடைக்கலக் காதை காட்டும் கண்ணகி விதந்துரைக்கப்பட வேண்டியவள். இங்கு பாசத்துடன் கணவனுக்கு உணவு பரிமாறும் கண்ணகியைச் சந்திக்கின்றோம்; அஞ்சாதீர்கள் என்று ஆற்றுப்படுத்தும் கண்ணயைச் சந்திக்கின்றோம்; சிலம்பு விற்பது பற்றி பற்பல ஆலோசனைகளை, பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கும் நுண்மதியும், அனுபவ அறிவும் கொண்ட கண்ணகியைச் சந்திக்கின்றோம். மேலும் விதியின் வலிமை பற்றிக் கூறும் கண்ணகியையும் இங்கு காண்கின்றபோது சிலம்பின் மூன்றாவது நோக்கமும் (ஊழ்வினை மீட்டு வந்து உகுத்தும் என்பதும்') நினைவுக்கு வருகிறது. (கண்ணகி கோவலன், முதலானோர் மட்டுமன்றி மாதுலன் முதலான புதிய பாத்திரங்களும் விதி வலிமை பற்றிக் கண்ணகி வழக்குரையில் வற்புறுத்தியுரைக்கின்றன.)

மனிதப் பெண்ணாக அவதாரம் எடுத்து வந்துள்ள கண்ணகி மறுபடி தெய்வப் பெண்ணாக முற்படுவதன் ஆரம்பம் ''அம்மன் கனாக் கண்ட காதையில் இடம் பெறுகிறது. கனவின் மூலம் கோவலன் கொலை பற்றி உணர்ந்த கண்ணகி சபதமுரைத்துப் புறப்படுகின்றாள். அவ்வேளை கண்ணகியின் நிலை பற்றிக் கவிஞர் பலபட சுவையாக உரைக்கின்றார். ஓரிடத்தில்,''ஒரு கையில் குழைபிடித்து ஒரு கையில் சிலம்பு எடுத்தாள்'' என்றும் இன்னோரிடத்தில் ''பார்க்கினிய மோகினியோ பத்திரமா காளியரோ''என்றும் ஊரவர் வாயிலாகக் கூறியுள்ளவை இங்கு நினைவுக்கு வருகின்றன.

உயிர் மீட்புக் காதையின் சாதாரண பெண்ணாக ஒப்பாரி வைத்துப் புலம்பும் கண்ணகி வருகின்றாள் ('காசற்ற படியால் வந்தே காணக் கடவதானோமோ'')

வழக்குரைத்த காதை சிலப்பதிகாரம் போல் நீதியை நிலை நாட்டும் கண்ணகியைக் காட்டுகிறது. அத்துடன் நாட்டுப்பற்று மிகுந்த கண்ணகியையும் அறிமுகப்படுத்துகிறது. நிறையப் பேசும் இவ்விரு கண்ணகியரும் சிலப்பதிகாரக் கண்ணகியை விஞ்சியுள்ளனர். மேலும் சிலப்பதிகாரக் கண்ஊகியை விட, கண்ணகி வழக்குரைக் கண்ணகி நீதியை நிலைநாட்ட அதிகளவு போராட வேண்டியிருப்பதையும் அவதானிக்கிறோம்.

தெய்வப் பெண்ணாகிய கண்ணகி, மானிடப் பெண்ணாகி, பின் மாறி மாறி இரு நிலையுமெய்தி, இறுதியில் மறுபடி தெய்வமாகி விடுகின்றாள். ''குளிர்ச்சிக் காதைக்'' காட்டும் கண்ணகி அத்தகையவளே. அவளிடம் ஆயர் சேரியினர் வேண்டுகின்றனர்.

''பத்தினியே பாண்டியர் முன் பாரதமாய்
வழக்குரைத்த
மெய்த் திடுமென் திருமயிலே மென்கனகத்
தாளே
ஏற்றாமல் ஊரெரித்த ஒண்ணுதலே ஓவி
யமே
நாற்றிசையில் நடந்தவளே நாச்சியே
காத்தருள்வாய்''

மேற்கூறியவாறு ''கண்ணகி வழக்குரை'' கண்ணகியையே மட்டக்களப்பில் காணமுடிகின்றது. 'கண்ணகி வழக்குரை' இங்கு கோயில்களிலே படிக்கப்படுவதன் தாற்பரியமும் இது தான்.

கண்ணகி வழக்குரை பாடிய புலவர், பாடப்பட்ட காலம், புலவரது ஊர் என்பன கருத்து வேறுபாட்டிற்குரியவை. யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் (கி. பி· வரையான இடைப்பட்ட காலத்தில்) வாழ்ந்த சகவீரன் என்பவரால் இந்நூல் பாடப்பட்டது என்பதே பலரது கருத்தாகும். இராமநாதபுரத்திலிருந்து வந்து மட்டக்களப்பிலே வாழ்ந்த ஒரு புலவரால் பாடப்பட்டதென்றும் சிலர் கருதுவர். எவ்வாறாயினும் மட்டக்களப்புப் பிரதேச வழக்காறுகள் பலவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்பதே எமது கவனத்துக்குரியது. இத்தகைய கண்ணகி வழக்குரை இன்று வரை விரிவாக ஆராயப்படவில்லை என்பது எமது சிந்தனைக்குரியது.

தொடர் கதை

# மெழுகுவர்த்தி எரிகின்றது!

முத்து மாதவன்



பாடசாலை மாணவிகள் ஆசிரியர்கள் அனைவரும் ஐந்து நாள் சுற்றுப்பயண மொன்றை மேற் கொண்டனர், கல்யாணிக்கு கந்தசாமியும் வருகிறான் என்றதும் போகமனமில்லை, ஆனால், இது கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய ''ரூர்'' என்று அதிபர் கண்டிப்பாக சொல்லிவிட்டார், வேறு வழியின்றி கல்யாணியும் போனாள், சீகிரியாவின் சிற்பக் குகைகளைப் பார்த்து விட்டு, கொழும்பு சென்று அடையும் போது மாலையாகவே அங்குள்ள பிரபல கல்லூரி ஒன்றில் தங்குவதற்கு ஏற்பாடானது.

மகிழ்ச்சிகரமான சம்பாஷனைகளுக்குப் பின் எல்லோரும் உணவருந்தினர், கந்தசாமி ஏதாவது குறும்புகள் செய்வான் எனப்பயந்தபடி இருந்த கல்யாணி அவன், அவள் இருந்த பக்கமே பார்க்காது பரம சாதுவாக இருந்தது. கண்டு ஆச்சரியம் அடைந்திருந்தாள், எல்லோரும் படுக்கைக்குப் போனார்கள், பதுங்கித் தாக்கும் தந்திரத்தால், பரம சாதுவாக நடித்த கந்தசாமி, தனது குறியிலேயே கண்ணாக இருந்தான். எதுவிதகவலையுமற்ற கல்யாணி, தோழிகளோடு, அயர்ந்து தூங்கி கொண்டிருந்தாள், தூக்கமின்றிப் புரண்ட கந்தசாமி மெல்ல எழுந்து தாபம் மேலிட பெண்களின் அறையை நோக்கி நடந்தான், அறை வெறுமனே சாத்தப்பட்டிருந்தது... அவன் கைவைக்க கதவு திறந்து கொண்டது. உள்ளே!... மங்கிய வெளிச்சத்தில்' ஒரு ஓரமாக படுத்திருந்த கல்யாணியை ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்ட கந்தசாமி, பூனையாக மெல்லநடந்து துடிக்கும் உள்ளத்தோடு, அவளை நெருங்கி...''

'ஆ' வென்று கத்தினாள் கல்யாணி திடுமென எல்லோரும் வாரிச்சுருட்டி எழும்பி ''திருடன்... திருடன்...'' என்று அலற!... பெண்களது அறையை நோக்கி வெளியே படுத்திருந்த ஆசிரியர்கள் ஓடிவர! ஓட முயன்ற கந்தசாமியை பாய்ந்து பிடித்தாள் கல்யாணி 'பளீரென விளக்கெரிய ' மிரள மிரள விழித்தபடி.... கந்தசாமி கூனிக் குறுகி நின்றான், அவ்வளவுதான் பத்ரகாளியாகினாள் கல்யாணி, என்ன செய்கிறோமென்று கோபத்தில் புரியாமலும், ஏற்கனவே அவன் மீது கொண்டிருந்த ஆத்திரத் தாலும், அவமானத்தாலும் பளீர்; பளீரென அவனது கன்னத்தில் அறைந்தாள் கல்யாணி,

அவன் முகத்தில் துப்பினாள் நீயும் ஒரு மாணவனா?...! கேவலமான மனிதமிருகம் ''என்று திட்டினாள், எல்லோரும் அருவருப்போடு அவனைப்பார்த்து வாய்க்கு வந்தபடி வசைமாரி பொழிய! அவன் குனிந்த தலை நிமிராது நடந்து அந்த நடுவிரவில், தெருவில் இறங்கி தொலைதூரம் இருட்டில் நடந்து மறைந்தான்.

அத்தோடு சுற்றுப்பயணம் நிறுத்தப்பட்டு அனைவரும் ஊர் திரும்பினர். கந்தசாமியைப்

பற்றி யாருமே அக்கறை கொள்ளவில்லை, ஊரில் விஷயம் வெளியாகியது, மாசிலாமணி கல்யாணிக்கு கோபமாய் ஏசத் தொடங்க, கந்தசாமி தன்னை கீழ்த்தரமான எண்ணங்களோடு நெருங்கியதையும் பழகியதையும், கல்யாணி அம்பலமாக்கினாள், வெறும் வாய்க்கு அவல் கிடைத்த சந்தோசத்தில் ஊர்ச்சனங்கள் கனகசபையரின் காதுபடும்படி வசைமாரி பொழிய. கனகசபை துடித்துப் போனார், தனது குடும்பமானம் கருதி பாக்கியத்தின் பிரச்சனையை அறைக்குள்ளேயே தீர்ந்துக் கொண்ட அவரால் இதை தாங்கும் சக்தி இல்லாது போயிற்று. அதே குடும்ப மானம் தனது மகனால் அம்பலத்திற்கு வந்ததையிட்டு பெரும் கவலை வாட்டிற்று, ஒரே ஒரு மகன் இப்படி சீரழிந்ததையும், தன்னால் வெறுக்கப்பட்ட குடும்பத்தில் இந்த நிகழ்ச்சி நடக்க தம்மீது கொண்ட பகமை உணர்வை கல்யாணி இப்படி பழி தீர்த்து விட்டாள் என்ற வெப்பிசாரத்தாலும் அவர் குன்றிப் போனார்,

''மங்களம் . நம்ம அருமைப் புத்திரனின் எழிய குணத்தால, இது கால வரைக்கும் தலை நிமிர்ந்து நடந்த நான் ... இப்போ? றோட்டில் தலையைக் குனிந்து கூட நடக்க முடியாமல் போயிற்று.. என்று நாத்தழுதழுக்க மனைவியிடம் கூறினார் எதுவும் தோன்றாதவளாக நின்றிருந்த மங்களம் கேள்விக்குறியோடு வேதனை கொண்டிருந்த கணவனை நோக்கினாள்... ''இனி' அவன் இங்கு வரக் கூடாது. கொழும்பிலேயே இருக்கட்டும்! நாமளும் வேற ஊருக்குப் போயிடலாம் என்றார் உறுதியான குரலில், திகைத்துப் போனாள் மங்களம் அவள் அவரை எதிர்த்து ஒரு வார்த்தையும் பேசி அறியாதவள். அப்படி பேசினாலும் அவரது தீர்க்க முடிவு நிச்சயம் மாறாது. என்பதையும் மங்களம் அறிவாள்... 'மங்களம் ...நாம வேற ஊருக்கு போறம், என்றாலும் இங்கே உள்ள வூடு, வளவு, தோட்டங்கள் இப்படியே இருக்கட்டும்! காவலுக்கு குடும்பத்தை வைப்பம்! .. எதற்கும் நாளைக்கு நான் கொழும்புக்கு போய் அவனைப் பார்க்கிறன்... அங்க சீரழிந்து திரியுறானோ? .. என்றபடி எழுந்து போனார்.

ஒரே மகன் அல்லவா! மங்களத்தின் பெற்ற வயிறு பற்றி எரிய அந்த எரிவின் பிரதி பலிப்பாக கண்கள் குளமாயிற்று.

கொழும்பில் பல இடங்களில் சுற்றியலைந்து இறுதியாக மகன் இருக்கும் இடத்தை ஒரு நண்பரின் மூலம் கண்டுகொண்டு அந்த வீட்டின் உள்ளே போனார் கனகசபை.

அறைக்குள்ளிருந்து அன்றைய தினசரி ஒன்றை புரட்டியபடி படுத்திருந்த கந்தசாமி கனகசபையரைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து 'அப்பா!'...என்றபடி அவர் காலில் விழுந்தான். ஆத்திரத்தோடு வந்த கனகசபை, மகனின் மெலிந்ததோற்றத்தையும் வாடிப்போன முகத்தையும் அடைக்கலம் என்று காலில் விழுந்த நிலையையும் கண்டு உள்ளம் நெகிழ்ந்தார். ''அப்பா என்னை மன்னிச்சிடுங்க''... அறியாமையால இப்படி நடந்து உங்களுக்கு பெரிய அவமானத்தை உண்டாக்கி, தீராத களங்கத்தை ஏற்படுத்திட்டன். கல்யாணி வேண்டுமென்று நம் குடும்பத்தின் மீது சிறிய விஷயத்தை பெரிதாக்கி அவதூறு கற்பித்து விட்டாள்...'' என்று கேவினான் கந்தசாமி

''டேய்! எழும்புடா!... பிழையை அவள் மீது மட்டும் சுமத்திட்டு நீ! குற்றத்திலிருந்து தப்ப நினைக்காத...! அந்தக் குடும்பத்தோட உறவே அறுத்தெறிஞ்சி பல காலமாச்சி! நீ என்னடா 'என்றா? பாசத்தை முறையோட புதுப்பிக்க நினைச்சிருக்கா!...ம் இதனால' நம்ம குடும்பமானம் மட்டுமல்ல குடும்பமே வெளியேறுற நிலை ஏற்பட்டிருச்சி ..''என்று விசனத்தோடு கனகசபை சொல்ல... 'அப்பா நீங்க என்னப்பா சொல்றீங்க' என்று அதிர்ச்சியோட கேட்டான் கந்தசாமி.

''இவ்வளவு பெரிய அவமானத்தோட அந்த ஊர்ல வாழமுடியுமா? வேற ஊர்ல வீடு வாங்கி இருக்கப்போறம்.. 'கந்தா . ! நீ இனிமே கொழிம்பிலயே படி இல்ல இந்தியாவில படிக்கிறன்என்டாலும் சொல்லு ஏற்பாடி செய்யிறன் டேய்! எவ்வளவு பணம் செலவழித்தாலும் பரவாயில்லடா! நீ ஒழுங்கா நேர்மையா படிச்சி ''நான் ஊதாரியுமில்ல காவாலியுமில்ல ஒரு ''ஜெண்டில்மென்'' என்பதை இந்த ஊருக்குக்காட்டுடா! என்கையில் சத்தியம் பண்ணுடா?...ம்...'' என்று உணர்ச்சி வசப்பட்டு தன் கையை விரித்து நீட்டினார். கனகசபை ''அப்பா! உங்க மேல ஆணையா சொல்றன் இண்டையில இருந்து நான் மனிதனாக வாழ்ந்து காட்டுறன். படித்து பட்டம் பெற்று புகழ்மாலையை உங்களுக்கு சூட்டி மகிழ்வேன் அப்பா கனகசபையரின் கரத்தில் தனது கையை வைத்து, நெஞ்சை நிமிர்த்தியபடி சொன்னான் கந்தசாமி உள்ளம் மகிழ்ந்து உவகை கொண்டார் கனகசபை.

## ஏனிந்த ஆராதனை

புதுப்பாடல் நடைபோடுதோ - அது
புதுராகம் தனைத்தேடுதோ
பழகாத புதுத்தாளமோ - யாரும்
பயிலாத சங்கீதமோ

மனமேடை நிழலானது - அது
மனுவேதப் பொருளானது
உணர்வோடு ஒலியானது - என்றும்
ஓங்கார வடிவானது

காலத்தின் ஆராதனை - பூங்
கலசத்தின் புதுவாசனை
மோனத்தில் எழுநர்த்தனம் - உள்
மூச்சினில் நிகழ் சங்கமம்

எண்ணங்கள் அலைகின்றன - அங்கே
இதயங்கள் துயில்கின்றன
வண்ணங்கள் குழைகின்றன - அதில்
வடிவங்கள் அழுகின்றன

மானிடம் வென்றாவதா? - வாழும்
வரலாறும் நின்றாவதா?
ஏனிந்த ஆராதனை - நாளை
இல்லாமை அது போதனை!

-- வெல்லவூர்க்கோபால் --

## வேலைக்கு வருகின்றேன்

சுற்றி வளைப்பென்று
வீட்டு நாய்கள்
கூறியதால்
சிப்பாய்களுக்கு பதில்கூற
ஆயத்தம்
காலை ஐந்தரைக்கு
துருப்புக்களின் கைகளில்
எனது அலுவலக அட்டை
தொழிலைக் கூறியும்
தேசிய அட்டைதான்
வேண்டுமென்றார்
எனது அப்பாவித்தனந்தானோ
முகமூடிக்கு இரக்கம் வர
விடுதலை
வண்டியேறி வரும்போது
வீதித்தடை
வண்டியில் பின் இறங்கிமுன் ஏற
எங்களுக்குள் போட்டி
இறங்கி வரிசையில் வரச்செல்ல
ஆறேழு வரிசைகள்
இங்கு பொதி உணவை பிசைந்து
தருகிறார்கள்
இவ்வேளை எனது
ஆசனம் பறிபோகிறது
என்ன செய்ய
நின்று கொண்டு
வேலைக்கு வருகின்றேன்

-- வாகரை தேவன் --

# "உமது சூழலை தெரிந்து கொள்"

க. பிரேமகுமார்
விவசாய இரசாயனவியற் துறை,
விவசாய பீடம்
கிழக்குப்பல்கலைக் கழகம் இலங்கை.

(சென்ற இதழில் வெளிவந்த தன் தொடர்ச்சி)

### 4. பசுமை வீட்டுத்தாக்கத்தில் "ஓசோன் படல துவாரத்தின்" பங்களிப்பு என்ன?

ஒன்றுமில்லை. ஓசோன் இயற்கையாக வானவெளியின் மேல் வளிமண்டலத்தில் காணப்படும் ஒட்சிசனின் ஒருவித படிவம் ஆகும். இது எம்மை தோல் புற்று நோயை உருவாக்கும் ஊதா கடந்த கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்க ஒரு கேடயம்போல் உதவுகின்றது. 1985ல் விஞ்ஞானிகளால் உறுதி செய்யப்பட்ட "அன்டாட்டிற்காவுக்கு மேலுள்ள ஓசோன் படலத்தின் தற்காலிக மெல்லியதாதல்" என்ற கருத்து ஒரு புதுவித கொள்கைக்கு இட்டுச் செல்கின்றது. "ஓசோன் படத்தின் மெல்லியதாதல் சனத்தொகை கூடிய இடங்களுக்கும் பரவுமானால் அதிகரித்த நோய்களை உருவாக்க இது காரணமாய் அமையும்.

### 5. எமது சூழலின் மேல் பூகோள வெப்பமாதலின் பாதிப்புக்கள் எவை?

அ) சராசரி வருடாந்த வெப்பநிலை 3 பாகை பரனைட்டிலிருந்து 8 பாகை பரனைட்டுக்கு உயருகிறது. இந்த வெப்பநிலை மாற்றம் காரணமாக உருகுகின்ற பனிக்கட்டிகள் அபாயகரமான தாக்கத்தை விவசாயத்திலும், இறுதியாக கடல் மட்டங்களிலும் உருவாக்க முடியும்; வெப்பநிலை உயர்ச்சி துருவ பனிக்கட்டி கோளங்களை உருகச்செய்வதன் மூலம் அதிகளவு நீரை வெளியேற்றி சமுத்திர மட்டம் உயர்வதற்குக் காரணமாக அமையும்.

ஆ) மண்ணிலிருந்து அதிகளவு நீராவியாதல் நடைபெறும். நீரியல் வட்டம், கடல் சூழற் தொகுதியின் உப்புத்தன்மை, நன்னீர் தொகுதி போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படுதலும் மீன், முட்டை உற்பத்தி பாதிக்கப்படுதலும்;

இ) வாழும் அங்கியின் நொதிய தொழிற்பாட்டின் பாதிப்பினால் சுவாசமும் ஒளித்தொகுப்பும் பாதிப்பு அடைதல். உக்கும் வீதம் கூடுதல்;

ஈ) புற்றரைகளும், பாலைவனங்களும் அதிகரிகப்பதோடு உயிர்ப்பு மிக்க காடுகள் சுருங்கிக் கொண்டு வருதல். இறுதியாக வெள்ளம், சுழற்காற்று மற்றும் காட்டுத் தீ போன்றவை புவியில் சர்வசாதாரணமாகிவிடும்.

உ) பூகோள வெப்பமாதல் கீழ் வாய்வுமண்டலத்திலுள்ள இரசாயன தாக்கத்தின் அளவை கூட்டுவதன் காரணமாக மீதேனும் ஏனைய ஆவிப்பறப்புள்ள இரசாயனங்களும் ஒட்சியேற்றத்திற்குள்ளாகும்.

ஊ) வளிமண்டலத்துக்கு அதிகளவில் கரியமில வாயுவை வெளியேற்றி கொண்டிருக்கும் நிலக்கரி எரிப்பு தொழிற்சாலைகளின் பங்களிப்பை, அணுசக்தியாலைக

ளால் உடனடியாக மாற்றீடு செய்வதன் மூலம் அணுசக்தி எதிர்ப்பு பரிமாணத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தல்.

எ) வெப்பமான காலநிலை, பனியுடன் கூடிய ''தண்டுரா'' வனத்தை பனி உருகல் காரணமாக நாசம் செய்யும் தன்மை. உறைந்த மண்ணும், ''பேர்மா'' வனமும் உருகலினால் உருவாகும் அதிக நீர் வெளியேற்றம் நிலச்சரிவுகள் ஏற்படுவதற்கு வழிவகுத்தல். இதனால் இவ்வனச் சூழற்தொகுதி நீண்ட காலமாக இப்பகுதியில் ஜீவிக்கும் ஓநாய்கள், மில்லியன் கணக்கான பறவைகள் போன்றவற்றிற்கு சரணாலயமாக இருக்காது. ''பேர்மா வனம்'' உருகுவதினால், மிக அதிக தொகையான பனிக்கட்டியுள் அடைபட்டு கிடந்த மீதேனும், உக்கல்கள் உக்குவதினால் மேலதிக கரியமில வாயுவும் வெளியேற்றப்படல்.

ஏ) சில நேரங்களில் ''மீதேன் ஹைதரேற்றானது'' நீருடன் சேர்ந்து ஒரு நிலையான அமைப்பை சமுத்திரத்தின் வண்டல் பாறைப்படுக்கையில் உருவாக்குகின்றது. பூகோளம் வெப்பமாகும் போது, சமுத்திரத்தின் வெப்ப நிலையும் அமுக்கமும் அதிகரிப்பதால் இப்பாறைப் படுக்கைகள் நிலை குலைதலுக்கு உள்ளாகின்றது. இதனால் வளிமண்டலத்தை நோக்கி வெளியேறும் மீதேன் வாயுவானது வெப்பக் கதிர் வீச்சை உறிஞ்சி பூகோள வெப்பமாதலை அதிகரிக்கின்றது.

## 6. காடுகளை அழித்தல் பசுமை வீட்டுத் தாக்கத்தை மிகைப்படுத்துமா?

மரங்களும், தாவரங்களும் வளரும் போது அவை வளிமண்டலத்திலுள்ள கரியமில வாயுவை அகற்றுகின்றன. இவை எரிதலுக்கோ அல்லது உக்குதலுக்கோ உட்படும் போது சேமிக்கப்பட்ட கரியமில வாயுவை வளிமண்டலத்தை நோக்கி மீண்டும் வெளியேற்றுகின்றன. பூமியின் மேலுள்ள பல சதுர மைல் காடுகள் அழிக்கப்பட்டு, எரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இது மேலும் கரியமில வாயுவின் வளிமண்டல ஒருங்கு குவிதலுக்கு வழிவகுக்கும் என்ற கருத்துக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதுமுள்ள மில்லியன் ஏக்கர் நிலங்கள் மரக்கன்றுகளின் நடுகைக்குள்ளாக்கப்பட்டு கொண்டுதான் இருக்கின்றன. இருந்த போதும் பூகோள வெப்பமாதலின் மீது காடழித்தலின் பாதிப்பு சம்பந்தமான எவ்வித சான்றுகளும் புதிய கண்டு பிடிப்புக்களின் படி சுட்டிக்காட்டப்படவில்லை.

## 7. பூகோளம் வெப்பமாதலை எவ்வாறு தடுக்க முடியும்?

அ. சூரிய சக்திபாவனை, காற்றாடிபாவனை, நிலவெப்ப பாவனை போன்றவற்றிற்கு அரசாங்கம் மானியம் அளித்தல்.

ஆ. காடுகளைப் பாதுகாப்பது சம்பந்தமான சட்டத்தை இயற்றி அதை அமுல்படுத்துதல்.

இ. நிலக்கரி மற்றும் உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையைக் குறைக்க அதிகளவு வரியை அவற்றை பாவிப்போருக்கு எதிராக நடைமுறைப்படுத்தல்.

## அமிலப்படிவு

1. அமிலப்படிவானது அதிகமாக எல்லாச் சூழல்களையும் பாதிப்பதால் தற்போது அது மிகப் பெரிய சூழல் அச்சுறுத்தலாக உள்ளன. (அமில காரணி 2, 5, 2. 2,1.5 ஆக ரொன்ரோ(1079) லொஸ் ஏஞ்சல்ஸ் (1981) மற்றும் அமெரிக்காவிலுள்ள ஏனைய பிரதேசங்களில்) அமிலப்படிவு உண்மையில் சூழல் நீரில் அமில மாசுப் பொருட்கள் கரைவதால் உருவாகும் மழை, பனி மழை, புகார் போன்ற போர்வையிலான, ஈரத்தன்மையுள்ள வண்டலாகும். அதிகளவு அமிலமாசுப் பொருட்கள், எரிபொருட்கள் எரிவதால் உருவாகின்

றன. எரிதல் ஒட்சியேற்றத்தில் முற்றுப் பெறாத வாயுக்களான நைதரசனீரொக்சைட்டு, நைதரசன் ஓர் ஒட்சைட்டு, கந்தகவீரொக்சைட்டு, அமில தூமங்கள் மற்றும் அமில காற்று துகள்களை வெளியேற்றுகின்றது. இந்த வாயுக்கள், மழை வளி மண்டலத்தினூடு செல்லும் போது மழைத்தண்ணீரில் கரைந்து மழை அல்லது பனி மழையினை அமிலத்தன்மையுள்ளதாக்குகின்றது.

**2. ஏன் இந்த வாயுக்கள் தோற்றுவிக்கப்படுகின்றன!**

**அ. கந்தகவீரொக்சைட்டு,**

1. கந்தகம் அதிகமாக உள்ள எரிபொருளை எரிக்கும் சக்தி நிலையங்களுள்ள பாரிய கைத்தொழிற்பேட்டையில் தோற்றுவிக்கப்படல்.
2. உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரித்தல்
3. இயற்கையாகவே எரிமலையிலிருந்து தோற்றுவிக்கப்படல்.

**ஆ. நைதரசன் ஓரொக்சைட்டு, நைதரசனீரொட்சைட்டு.**

1. நைதரசன் அதிகமாகவுள்ளஉயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரித்தல்.
2. வாகனங்கள் வெளியேற்றும் புகை.
3. இயற்கையாகவே எரிமலை மூலமும், மின்னலின் மூலமும் தோற்றுவிக்கப்படல்.
4. கைத்தொழிற்சாலைகளில் இருந்து உருவாகும் அமிலத் தூமங்கள் மூலம்.
5. எரிபொருட்களை எரிப்பதால் உருவாகும் ஐதரோகாபனிலிருந்து உருவாகுதல்.

**3. சூழலில் இதன் பாதிப்புகள் என்ன?**

1. மண்ணில் அமிலத்தன்மை கூடுவதால் உலோக மூலகங்களின் அசைவு கூடுதல். (அலுமினியம் தாவரத்திற்கு நச்சுத்தன்மையுள்ள மட்டத்திற்கு கூடுதல்)
2. மண்ணிலுள்ள தாவர போசனை மூலகங்கள் தாவரத்துக்கு கிடைக்காமல் போதல் மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் ஏனைய அங்கிகளும் கொல்லப்படுவதால் உக்கும் செய்கை தடுக்கப்படுகின்றது.
3. பசுமையான மரங்களின் இலைகளுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தல்.
4. ஏரிகள் அமிலமாக்கப்படுவதால் உணவுச் சங்கிலித் தொடர் குழப்பமடைதல்.
5. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள்(தாஜ்மகால் போன்றவை) அரிக்கப்பட்டு மாசுபடுதல்.
6. அங்கிகளை நேரடியாக உறுத்துதல்.

**4. சாத்தியமான நிவர்த்திகளை எவ்வாறு காண்பீர்?**

1. சூரிய சக்தி,நீர்ச்சக்திபோன்ற மாற்றீட்டு சக்தி முதல்களின் பாவனை.
2. உயிர்வாயு போன்ற மாற்றீட்டு எரிபொருள் முதல்களைக் கண்டு பிடித்தல்.

### மழைக்காடுகளின் அழிப்பு

**1. இயற்கை சூழல் சமநிலையை பராமரிப்பதில் காட்டு சூழல் தொகுதியின் பங்களிப்பு என்ன?**

அ) போசணை மூலகங்கள் மண்ணுக்கும், தாவரத்துக்குமிடையில் பரிமாற்ற சுற்றுவட்டத்திலீடுபட உதவுதல். போசணை மூலகங்களை மண்ணிலிருந்து கழுவப்படாமல் பிடித்து வைத்திருத்தல்.

ஆ) தாவர குடை, மண்ணரிப்பிலிருந்து மண்ணை பாதுகாத்தல்.

இ) நீராவியுயிர்ப்பின் காரணமாக அயன மண்டல காற்று குளிர்மையடைதலும், நீராவியிலிருந்து மேகங்கள் உருவாதலும்.

ஈ) மேகங்கள் சூரியக் கதிர்களைத் தெறித்தலுக்கு உட்படுத்துவதோடு, புவியின் மழைப் பரம்பலையும் தீர்மானித்தல்.

உ.) புவியின் காற்றோட்டத்தில் மேகங்கள் பங்குபற்றி சூடான காற்றை உயர்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லல்.

**2. இந்த மழைக்காடுகளை அழித்ததினால் ஏன் சாதாரணமானதும், பூகோள சம்பந்தமானதுமான கால நிலை மாற்றங்கள் உருவாகியது ?**

அ) இந்த மழைக்காட்டு சூழல் தொகுதிகளின் சாதாரணமானதும், பூகோள சம்பந்தமானதுமான காலநிலை பங்களிப்புக்கள் சீர்குலைக்கப்பட்டமை (கேள்வி 1 ஐப் பார்க்கவும்)

ஆ) வெளிக்காட்டப்பட்ட மேல்மண் மண்ணரிப்பின் காரணமாய் கழுவப்பட்டமை.

இ) காடுகளையும், மரங்களையும் எரித்தல், வளிமண்டலத்தில் கரியமில வாயுவை வெளியேற்றி பசுமை வீட்டுத் தாக்கத்தை கூட்டியமை.

ஈ) வளியிலிருந்து கரியமில வாயு அகற்றப்படுதல் குறைந்தமை.

## ஓசோன் படலத்தின் பாதிப்பு

**1. ஓசோன் படலத்தை எங்கே காண்பீர்?**

ஓசோன் படலமானது வளிமண்டலத்தில் புவியின் மேற்பரப்பிலிருந்து 15 தொடக்கம் 30 மைல்களுக்கு அப்பால் நிலை கொண்டுள்ளது. மேலும் இது உயர்மட்ட ஓசோன் மூலக்கூறுகளால் ஆக்கப்பட்டுள்ளது.

**2. ஏன் ஓசோன் படலமானது புவிக்கு மிகமுக்கியம் வாய்ந்ததாக உள்ளது?**

சூரியனிலிருந்து வெளிவரும் சூரியக் கதிர் வீச்சானது அதிக செறிவான ஊதா கடந்த கதிர்களைக் கொண்டுள்ளது. இவ் ஊதா கடந்த கதிர்கள் மனிதனுக்கு தீமை விளைவிக்கக்கூடிய தோல் புற்று நோய் மற்றும் ஏனைய தோல் நோய்களுக்குக் காரணியாக உள்ளது. சூரிய கதிர் வீச்சானது ஓசோன் படலத்தோடு செல்லும்போது 99 வீதமான உள்செல்லும் ஊதா கடந்த கதிர்களை ஓசோன் படலமானது உறுஞ்சுகின்றது. சாதாரணமாக தீமையளிக்கக்கூடிய செறிவில்லாத மிகச்சிறிய தொகை ஊதா கடந்த கதிர் வீச்சே புவியை வந்தடைகிறது.

**3. ஓசோன் படலத்தின் பாதிப்பு அல்லது துவாரங்களுக்கான காரணங்கள் என்ன?**

குளிரூட்டிகள் ஊதப்பட்ட பிளாஸ்றிக்குகள், வாசனை சிவிறல்களில் உபயோகப்படுத்தப்படும் குளோரோ புளோரோ காபன்களும்: நெற்செய்கை நிலங்கள் மாடுகளிலிருந்து உருவாகும் மீதேன் வாயுவும்; வாகனங்கள் வெளியேற்றும் புகைகளிலும் சக்தி நிலையங்களிலும் உருவாகும் நைதரசு ஒட்சைட்டும் ஓசோன் படலத்தில் உள்ள ஓசோன் மூலக்கூறுகளுடன் தாக்கமடைந்து சுயாதின ஒட்சிசன் மூலக்கூறுகளை உருவாக்குவதன் மூலம் ஓசோன் படலத்தை பிரிகையடையச் செய்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இறுதியாக இச்செய்ற்பாடானது ஓசோன் படலத்தில் துவாரங்கள் உருவாவதலுக்கு அடிகோலுகின்றது.

**4. ஓசோன் படலத்திலுள்ள துவாரங்கள் எவ்விதம் பூமிக்கு சூழல் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது?**

எங்கெங்கு ஓசோன் படலமானது பிரிகையடைந்து துவாரங்கள் காணப்படுகின்றதோ, அதனோடு மிகவும் அபாயகரமான ஊதா கடந்த கதிர்கள் புகுந்து புவியை அடைவதால் புவியிலுள்ள மனி

தன் மற்றும் மிருகங்களின் மீது தோல் புற்றுநோய் ஏனைய தோல் வியாதிகளை உருவாக்கி சூழல் அழிவினை தோற்றுவிக்கின்றது.

## சாத்தியமான தீர்வை நோக்கி...

**1. மேற்கூறப்பட்ட பூகோளப் பிரச்சினைகள் மூலம் சூழல் பழுதடைதலுக்கும் அழிவடைதலுக்கும் பங்களிப்பு செய்யும் முக்கிய காரணிகள் யாவை?**

பஞ்சம், சனத்தொகைப் பெருக்கம், இயற்கை முதல்களின் தீவிரமான சுரண்டல் போன்றவையே சூழல் பழுதடைதலிலும் அழிவடைதலிலும் பங்கு வகிக்கும் முக்கிய காரணிகளாகும்.

நகரமயமாக்கல், கைத்தொழில் மயமாக்கல், காடுகள், மண், நீர், சேதனப் பொருட்கள் போன்றவையே தற்போதைய சூழல் பிரச்சினைக்குரிய அடித்தளங்கள் ஆகும். துரித அபிவிருத்தி இன்னுமொரு பங்களிப்பு காரணியாகும். இதன்படி, இயற்கை சூழலுக்கும் சூழற் தொகுதிக்கும் இடைப்பட்ட சமநிலையானது தொடர்ச்சியாகவும் ஆனால் அதி தீவிரத்துடனும் மனித நுகர்வு, மனித அபிவிருத்தி மற்றும் மனித தப்பிப்பிழைப்பு போன்றவற்றின் நன்மைகருதி குலைக்கப்படுகின்றது.

**2. இந்தப் பூகோளப் பிரச்சினைகளுக்குரிய சாத்தியமான தீர்வுகளை எப்படிக் காணமுடியும்?**

முதலில் சூழலும்- அபிவிருத்தியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று இனம் காணப்பட்டு சூழலும், அபிவிருத்தியும் அமைதியாக பக்கத்துக்கு பக்கமாக ஒருங்கே இணைந்து இருக்குமாறு செய்தல் வேண்டும்.

அதிக தொகையான மக்கள் சூழல் அழிவுக்கெதிராக தமது எதிர்ப்பை காட்டல் வேண்டும். சுயநலம் அழிக்கப்பட்டு பொதுநலம் மக்களின் மனங்கள் மத்தியில் உருவாக்கப்படல் மிக முக்கியம். இதனால் சூழல் பாதுகாப்பு என்ற ஒரு பொதுக் கருத்து மக்களிடையே உருவாக முடியும்.

சூழல் மதிப்பீடு இல்லாத அபிவிருத்திகள் நிறுத்தப்பட்டு, சூழல் கருத்துக்கள் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

சூழலை அசுத்தமடையச் செய்யும், மற்றும் பாழாக்கும் மக்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதுடன் இப்படிப்பட்ட மிக தீமையான செயல்களைச் செய்வோர் சமுதாயத்தினால் தள்ளிவைக்கப்படல் வேண்டும். மக்கள் சூழலைப்பாதுகாப்பதன் தேவையையும் அவதானமாக பரிபாலிப்பதன் அவசியத்யையும் உணரச் செய்து சூழல் பாதுகாப்பு துரித வேகத்துடன் முடுக்கி விடப்படல் வேண்டும்.

''நாளைய சூழல் இன்றைய நமது சூழல் நிலையின் உற்பத்தியே''

''ஒரு பூமியே நமக்கு உள்ளது கவனித்து பங்கிடு''

---

### திருத்தம்

கடந்த இதழில் வெளிவந்த ''உமது சூழலைத் தெரிந்து கொள்' கட்டுரையில் 1ம் பந்தியில் 22ம் வரியில் ''6 பில்லியன் (Billion) என்பதற்குப் பதிலாக 6 மில்லியன் (Million) என்று அச்சுத்தவறு ஏற்பட்டு விட்டது.

---

# மலர்ந்தும் மலராத......

-- வாழையூர் ஜெகா --

## அத்தியாயம்: 7



எனது அண்ணனை உரித்து வைத்தாற் போல் பிறந்திருக்கின்றான்' என்று அவள் சொன்னதும் அங்கு வந்திருப்பவள்தான் அவளது அண்ணனது மனைவி என்பதை அறிந்து கொண்டேன். அவன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அவனுக்கும் ஆசாபாசங்கள் இருக்கத்தானே செய்யும்.ஒருவன் நல்லவனாவதும், தீயவனாவதும் சந்தர்ப்ப சூழ் நிலைகளே! கட்டழகியான தன் மனைவியின் மானத்தைக் காப்பாற்ற கொலையே செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகி, தன்னைப் பழிவாங்க வந்தவர்களையும் தொடர்ந்து கொலை செய்து கொலைகாரன் என்ற பட்டமும் சூட்டப்பட்டு சமூக விரோதியாகி வனாந்தரத்திலே மிருகங்களுடன் அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்குஅவன் உருவாக்கப்பட்டிருந்தான்; அவன் எவ்வளவுதான் நல்ல செயல்களைச் செய்திருந்தாலும் சமூகம் அவனுக்கு உரிய இடத்தைக் கொடுக்கவில்லை.காரணம் அவன் ஒரு கொலைகாரன். சமூகம், சட்டம் இவையெல்லாம் சேர்ந்து சூட்டிய பட்டத்தை அவற்றால் வாபஸ் வாங்கப்படாமல் அவன் மறைந்து விட்டான். ''யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்'' என்பார்கள். அதே போல அவன் உயிருடன் இருக்கும் போது நன்றாக உழைத்தான்.இறக்கும் போதும் அவனுக்காக வழங்கப்பட்ட சன்மானம் அவன் மனைவிக்கே கிடைத்து விட்டது. சன்மானத்தொகையை அவள் கையிலே ஒப்படைத்து விட்டு, ஹோட்டலில் தங்கியிருந்த அவளையும் ஒப்படைத்து விட்டு அவர்கள் இருவரையும் காரிலேற்றி அவர்களது வீட்டிலே கொண்டுபோய் இறக்கிவிட்டு,விடை பெற நினைத்தேன். அவர்களோ விடவில்லை. ''சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும்'' என்று ஒரே பிடியாய் இருந்தார்கள். தேனீருடன் விடை பெற்றேன். இப்பொழுது என் மனைவியின் சந்தேகம் பூரணமாகத் தீர்ந்து விட்டது. இனிமேல்தான் நாங்கள் தேனிலவுக்குப் போக வேண்டும். சரியான அவசரமாக இருப்பதால் வாசகர்களிடமிருந்து பூரணமாக விடை பெறுகிறோம். கடந்த ஆறு அத்தியாயங்களிலும் கதையின் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டவர்களுக்கு நன்றி.

முற்றும்.

# ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள்
## தெய்வீகமடைந்த போது (19-7-47)
## புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்
## பாடிய செய்யுள்கள்

1. காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு
   கடவுட் காதல் மகன்
   கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர்
   கண்ணிறை திருமயி லோன்
   ஏரே றும்படி கீழ்பால் மேல்பா
   லாக்கிநல் இசைநட் டோன்
   இமயந் தலையிற் தமிழ்முத் திரைவரை
   யீழக் கரி காலன்
   சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில
   நூற் சுவை நிலை கூட்டித்
   தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக
   தெய்வ அகத்திய னாம
   பாரே றும்புக ழாளன் தெய்வீக
   பதவிய டைந்தன னே
   பன் மொழி விபுலா நந்தன் தெய்வீக
   பதவிய டைந்தன னே

2. ஈழ முதற்பணி யிமயம் வரைக்கொடி
   கட்டு மிசைத் தமிழன்
   இந்திய வாணியை ஆங்கில பீடத்
   தேற்றிய புதுமையி னோன்
   தோழமை கொள்வட மொழிமய மாகிய
   தொன்மையி சைத்தமி ழைத்
   தூய தனித்தமிழ் வடிவிற் தோற்றிய
   தந்தை யெனுந்துணை யான்
   சூழமு தத்தமிழ் வாணர் மதிக்கொரு
   சோதிச் செஞ்சுட ரோன்
   சுவாமிசி வானந் தக்கட லாடிய
   படினமத தோற்றத் தோன்
   வாழிய வன்சுக வாழ்வு புகுந்த
   மங்கள நன்னா ளே
   மாதவ விபுலா நந்தன் வாழ்வடை
   மங்கள நன்னா ளே.

[முத்தமிழ் வித்தகர் அருட்திரு விபுலாநந்த அடிகளாரின் 46வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.]

# இலங்கையின் கல்விமொழிக் கொள்கை

## - ஒரு பார்வை.

— ச. குலசிங்கம் — போதனாசிரியர்

பெரும்பாலான ஆசிய நாடுகளின் கல்வியமைப்பு ஆழமான உள்நாட்டுக் கலாசாரப் பேதங்களால் பாதிக்கப்படுகிறது. இத்தகைய வேற்றுமை அல்லது பேதம் மொழி, சமயம் மற்றும் இனத்துவ அடையாளங்களிலிருந்து மேலும் கூர்மையடைகின்றது. பெரும்பான்மையினரின் தாய்மொழியையே தேசியமொழியாக சில நாடுகள் கொண்டுள்ளன. மொழி ரீதியான பிரச்சினைகள் பெரும்பான்மையினரின் அதிகாரத்தை நிலை நாட்டுதல், கல்வி தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றன. இலங்கையிலே, அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் அறிமுகப் படுத்தப்பட்ட தேசிய மொழிக் கொள்கைகள் நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகளின் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் ஒட்டுமொத்தமான தேசிய அபிவிருத்தி மீதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. மொழிக்கும் கல்விக்கும் இடையேயான தொடர்பு மிக நெருக்கமான தென்பதால் தேசிய மொழி அல்லது உத்தியோக மொழி சம்பந்தப் பட்ட பிரச்சினைகளும், தீர்மானங்களும் நாட்டின் கல்விக் கொள்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இக்கட்டுரை போதனாமொழி என்ற விடயத்தின் மீது விசேட கவனம் செலுத்தி இலங்கையில் தேசிய மொழிக்கும், கல்விக் கொள்கைக்கு மிடையிலான உறவு எத்தகைய சொல் நெறியினைக் கொண்டிருக்கின்றன என்பதனை சுருக்கமாக ஆய்வு செய்வதுடன் கிட்டிய எதிர்காலத்தில் அது எவ்வழி நோக்கிச் செல்லும் என்று எதிர்வு கூறி இருமொழிக் கொள்கை, கல்வி, தேசிய அபிவிருத்தி என்பவற்றுக்கிடையிலான தொடர்பின் அடிப்படையில் காணப்படும் சில பொதுவான அம்சங்களை அடையாளங் காண முயல்கிறது.

தொடர்பு கொள்ளலுக்கான அத்தியாவசியமானதோர் சாதனமாகவே ஆரம்பத்தில் மொழி தோன்றியது. இன்றும் கூட மொழீ உபயோகத்தின் நோக்கம் அடிப்படையில் கருத்து வெளிப்படுத்துவதாக அமைகின்றது. சமூக உறவுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை அளித்ததுடன், மொழி ஒரு வகை கலாசாரமொன்றியே ஒன்றிணைக்குங் கருவியாகவும் அமைந்தது. இந்த மொழியினூடாகவே ஒரு சமூகத்தின் பொதுவான அனுபம், அறிவு. கலாசாரப் பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் என்பன படிய வைக்கப் படுகின்றன ஒருவரது சிந்தனையினையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தவும் ஒருவர்க்கொருவர் தொடர்பு கொள்ளவும் உதவும் ஒரு கருவியாகவே மொழி தோன்றியது. வாழ்க்கை கலாசாரம், நாகரிகம், அறிவு என்பவற்றை மனித வரலாற்றில் சாத்தியமாக்கியது இந்த மொழிதான். ஒரு குழந்தை தனது தாய் மொழியூடாகவே தன்னைப் பற்றி, தனது குடும்பம். சூழல் என்பன பற்றி அறிந்து கொள்கிறது. இதனூடாகவே பாடங்கள், வீரயுகக் கதைகள், நிலம் பற்றிய கவிதை நயம் தோய்ந்த வர்ணனை, மரபுரீதியாக நிலவி வரும் அறிவு, தனது மக்களின் அரிய சாதனைகள் பற்றித் தெரிந்து கொள்கிறது. தனது மக்களின் உயரிய தன்மைகளையும், கலாசாரச் சாதனைகளையும் மொழிமூலமான வரலாற்றுச் சான்றுகளில் காண்கின்ற போது இயல்பாகவே அந்த மொழி

மீது ஓர் இறுக்கமான பற்றினைக் கொள்வதுடன் அந்த மொழியைப் பாதுகாக்க வேண்டும் என்ற பக்தியுடன் கூடிய பொறுப்புணர்வையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்கிறது.

ஒரு மக்கள் கூட்டத்தினர் தமது மொழி மீது பற்றுக் கொண்டிருப்பது வரலாற்றினைப் போன்று பழமையானது. மொழி மீது எந்தக் குற்றமும் இல்லை, ஆனால் மொழிமீது மக்கள் கொண்டிருக்கும் பற்றின் பல்வேறு அம்சங்களைத் தவறாகக் கையாளுவது தான் மக்களிடையே மொழி ரீதியான கலகங்களும் இரத்தக் களரிகளும் ஏற்படக் காரணமாக அமைகின்றது. இந்த உலகில் எல்லாமே மாறிக் கொண்டிருப்பதால் மொழி மக்கள் கூட்டத்தினரிடையே வகித்த பாத்திரத்திலும் மாற்றம் ஏற்படலாயிற்று. பல நூற்றாண்டுகளாக வேறுபட்ட மொழிகளைப் பேசுவோர் ஒப்பீட்டால் மிக சமாதான சகவாழ்வு வாழ்ந்ததுடன். மொழி தொடர்பான மோதல்களும் கலகங்களும் மிக அரிதாகவே இருந்தன. தேசிய வாதத்தின் பின்னரே அதாவது அரசியல் சாயம் மொழிமீது பூசப் பட்டபோது தான் அது மக்களிடையே பிரிவினையைத் தோற்றுவிக்கும் அம்சமாக உருவெடுத்தது. புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகளில் பெரும்பான்மைக் குழுவினரால் ஒரு மொழியைத் தேசிய மொழியாகப் பிரகடனப் படுத்த மேற்கொண்ட முயற்சியே மொழிக்கு அரசியல் பாத்திரத்தினை வழங்கியது எனலாம்.

குடியேற்ற நாடுகளாக இருந்த காலத்தில் ஆசிய மக்கள் பல மொழிகள் பேசப்பட்ட சூழலில் கூட தம்மிடையே பேதமின்றி ஒற்றுமையாக வாழ்ந்தனர். மொழிரீதியான போட்டிகளும், மோதல்களும் ஒரு போதுமே நிலவியதில்லை என்று கூற முடியா விட்டாலும் மிக அரிதாகவே நிலவின எனலாம். ஆங்கிலம் பிரெஞ்சி அல்லதுடச்சுமொழி ஏதாவதொன்று மேலாதிக்க மொழியாக குடியேற்ற நாடுகள் கொண்டிருந்தமையால் சுதேச மொழிகளுக்கிடையேயான போட்டியைத் தற்காலிகமாக வெனினும் தணிக்க உதவியது. சுதந்திரத்துக்குப் பின்னர் குடியேற்ற மொழிக்குப் பதிலாக சுதேச மொழியொன்றினைத் தேசிய மொழியாகவோ அல்லது உத்தியோகமொழியாகவோ பிரகடனப் படுத்த முயற்சி எடுக்கப்பட்ட போது மொழி ஓர் அரசியல் பிரச்சினையாக உருவெடுத்தது. சில சுதந்திர நாடுகளில் தேசிய மொழியாகவோ, உத்தியோகமொழியாகவோ கருதக் கூடிய மேலாதிக்க மொழி எதுவென்ற சர்ச்சை ஏற்படவில்லை என்பதால் தேசிய மொழியொன்றை தெரிவு செய்வது ஓர் அரசியல் பிரச்சினையாக உருவெடுக்கவில்லை. ஆனால் வேறு நாடுகளில் சுதந்திரத்திற்குப் பின்னர் சமூக, அரசியல், பொருளாதார காரணங்களுக்காக மொழிக்குழுக்கள் அணிதிரளும் ஒரு புதியதும் முக்கியமானதுமான போக்கு நிலவியது. இலங்கையில் சிங்களப் பெரும்பான்மையினரால் தமது மொழியை மாத்திரம் தேசிய மொழியாக்க எடுத்த முயற்சியின் (1956 சிங்களம் மாத்திரம் என்ற சட்டம்) விளைவாக தமிழர்கட்கும் சிங்களவர்கட்கு மிடையே இரத்த வெள்ளத்தை ஓடவைத்த இனக்கலவரங்களும், மோதல்களும், இடம் பெற்றன. இன்றுவரைதொடர்கின்றன- அரசியல் வடிவத்தை எடுத்துக் கொண்ட மொழி ரீதியான பிரச்சினைகள் தேசிய பொருளாதார அபிவிருத்தியை நலிவடையச் செய்யுமளவிற்கு மக்களிடையே பயம், பீதியைத் தோற்றுவித்து பிரிவினைக்கு இட்டுச் சென்றன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை உற்பட பல சுதந்திர நாடுகளில் மொழிப் பிரச்சினை தோற்றுவித்த சவால்களை எதிர்கொள்ள முடியாமல் தோற்றமை அரசியல் உறுதிப்பாட்டினைத் தடுக்கின்ற பல்வேறு காரணிகளும் குறிப்பிடத்தக்க தொன்றாக அமைகின்றது.

இந்த நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில், பிரித்தானியராட்சியின் போது ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்தது. அரச கருமங்

கள் ஆங்கிலத்திலேயே நடை பெற்றமையால் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட பாடசாலைகளினூடாக எழுது வினைஞர்கள் மற்றும் குறைந்த தரத்திலான அரசசேவை போன்ற துறைகட்கான ஊழியப் படையைப் பயிற்றுவிக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் ஆங்கிலக் கல்வியோ ஓர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கக் கூடியதாக இருந்தது. அந்நிய மொழியொன் றின் அறிவு எதிர்கால வேலை வாய்ப்புக்கு மிக இன்றியமையாததென்ற நிலை உருவாகி யது. சுதேச மொழிக் கல்வியும், தேசியக் கல்வி முறையும் தரக்குறைவானதாகவே பொது மக்கள் கண்ணில் பட்டன, அரச சேவை, தனியார் துறை வர்த்தக நிதி ஸ்தா பனங்களில் உயர்ந்த வருமானத்தைப் பெறக் கூடியதும் மதிப்பு வாய்ந்த உத்தியோகங்களை பெற்றுக் கொள்வதற்கான வழி ஆங்கிலக் கல்வியாகவே இருந்தமையால், பொது மக்க ளிடையே ஆங்கிலக் கல்வி மீதான கவர்ச்சி கலந்த மோகம் மிக அதிகமாகவே இருந்தது. எவ்வாறெனினும் ஆங்கிலத்தில் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பானது பணவசதி யுடனும் சமூக அந்தஸ்துடனும் தொடர்பு கொண்டதாக இருந்தது. உள்ளூர் வசதி படைத்த பெற்றோர் தமது பிள்ளைகள் ஆங் கிலத்தில் பயிலவேண்டுமென்று ஆசைப்பட்ட துடன் அதனை மதிப்பின் சின்னமாகவும் கருதினர். ஏனையவர்களும் அவ்வாறு ஆசைப் பட்டபோதும், அவர்களால் உயர்வான கட் டணங்களைச் செலுத்த முடியவில்லை. ஆங் கிலக் கல்வி பயின்றவர்கட்கும், சுதேச மொழி களில் கல்வி]யைத் தொடர்ந்தவர்கட்கும் இடையே சமூக ரீதியாக மிக அகன்ற இடை வெளி நிலவியது. ஆங்கிலக் கல்விக்கான மிக அதிகரித்த தேவை இலவச கல்விக்கானதோர் உந்துதலை ஏற்படுத்தியதன் விளைவாக 1944ல் கல்வியமைச்சரான C. W: கன்னங்க ராவால் இலங்கையில் முதன் முதலாக இலவச கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அரச பாடசாலைகளிலும், அரச உதவிபெறும் ஆங்கிலப் பாடசாலைகளிலும் அனுமதிபெற்ற மாணவர்களின் தொகை 1900 இல் 21000 ஆக இருந்து 1945 இல் 100000 ஆக அதிகரித்தது. ஒரு வரையறுக் கப்பட்ட எண்ணிக்கையிலான அரச எழுது வினைஞர்களை உருவாக்குதல் என்ற நோக் கத்திலிருந்து இலங்கைத் தீவின் எல்லாக் குடிமக்கட்கும் இலவசமாகக் கல்வியை அளித் தல் என்ற பரந்த இலட்சியத்திற்கு மாறிச் சென்றமை, அதிகப்படியான பெரும்பான்மை யினருக்குத் தெரியாத, புரியாத ஓர் அந்நிய மொழியில் கல்வியை வழங்குதல் என்பன கல்விக் கொள்கையினை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவையினை அரசுக்குத் தோற்று வித்ததுடன் சுதேச மொழிகளில் கல்வியை அளிப்பது பற்றிய சிந்தனைக்கும் வழிவகுத் தது. ஆங்கிலக் கல்வியின் தரமும் அதன் பெறு பேறுகளும் தொடர்ச்சியாக விரக்தியை உண்டு பண்ணுவதாகவும் அடிக்கடி விமர்சனம் செய் யப்படும் விடயங்களாகக் காணப்பட்டன.

கல்விக்கான வாய்ப்பில்எல் லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கக்கூடிய இலவசக் கல்விக் கொள்கையைஅரசாங்கம் அறிவித்தமைசாதா ரண மக்களுக்குப் பெரும் நம்பிக்கையை அளித் தது எனினும் உண்மையில் இந்த இலவசக் கல்வி ஆங்கிலப் பாடசாலைகட்கு வழங்குவது போலவே இருந்தது. ஆங்கிலப் பாடசாலை கட்குக் கட்டணம் செலுத்துவதை வாபஸ் பெற்றமை, ஏற்கனவே சுதேச மொழிகளில் கல்வி பெற்றுக்கொண்டிருந்த பெருந் தொகையான சாதாரண மாணவர்கட்கு எந்தவித நன்மையினையும் அளிக்கவில்லை. அத்துடன் அவர்கள் பாடசாலைகளிலிருந்து 12 முன்னரேயே விலகிக் கொண்டிருந்தனர். அதே வேளை சனத்தொகையில் 7% மான ஆங்கிலம் கற்றவர்களும், வசதி படைத்த வர்களுமாகிய பெற்றோர்களின் பிள்ளைகளை தவிர, சிரேஷ்ட வகுப்புகட்கு அதிகப்மடியான மாணவர்கள் வந்து சேர்வதை இலவசக்கல்வி பெரிதாக ஊக்குவித்ததென்று சொல்வதற்கும் இல்லை. அதுமாத்திரமன்றி கல்வி, நிருவாக

அமைப்பில் ஆங்கிலம் ஓர் உயரிய ஸ்தானத்திலேயே இருந்தது. இந்தச் சூழ்நிலையில் இலவசக் கல்வியின் உண்மையான இலட்சியத்தை அடைவதற்கு மேற்கொள்ளக்கூடிய தர்க்க ரீதியான அடுத்தபடி முழுக்கல்வி அமைப்பிலுமே சுதேச மொழிகளைப் போதனா மொழியாகப் பிரகடனப் படுத்துவதாகவே இருந்தது. இதன்படி 1945 இல் அரச சபை சிங்களம், தமிழ் ஆகிய சுதேச மொழிகளே ஆரம்பப் பாடசாலைகளில் முறையே சிங்கள தமிழ் மாணவர்கட்குப் போதனா மொழியாக இருக்கவேண்டுமெனத் தீர்மானித்தது.

இந்தத் தீர்மானம் பற்றி முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய தெற்காசிய ஆங்கிலம் பேசுவோர் சங்கத்தின் போஷகரான **J. R.** ஜெயவர்த்தன அவர்கள் அன்று தெரிவித்த கருத்துக்களை இவ்விடத்தில் நோக்குவது பொருத்தமாகும்.

''எங்கள் கல்வி அமைப்பு இருவகையான கல்வி ஸ்தாபனங்களாக பிரிக்கப்பட்டிருப்பது இதன் மிக முக்கியமானதொரு குறைபாடாகும். சில கல்வித் தாபனங்கள் கல்வியைத் தாய் மொழியிலும், மற்றவை ஆங்கிலத்திலும் அளிக்கின்றன. எனது கருத்துப்படி இக் குறைபாடானது இருவேறுபட்ட தேசங்களை உருவாக்கியிருக்கிறது. ஒரு தேசத்தில் சிங்களத்திலும், தமிழிலும் கல்வி பெற்று சிங்களத்தையும், தமிழையும் பேசுகின்றனர். மற்றைய தேசத்தில் ஆங்கிலத்திலேயே கற்று ஆங்கிலத்தையே பேசுகின்றனர். பிரித்தானிய ஆட்சி இந்த நாட்டில் அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு தீய அம்சங்களில் இது மிக முக்கியமானதாகும். இந்தப் பிரச்சினையின் மூல காரணத்தை அறிந்து கல்விக்குழு சுதேச மொழிகளைப் போதனா மொழியாகவும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகவும் சிபார்சு செய்துள்ளதென நான் நினைக்கிறேன்.''

தங்களால் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு மொழியில் தாம் ஆட்சி செய்யப்படுகிறோம் என்ற சுதேச மொழி பேசும் இலங்கையரின் விரக்தி, மொழி, கல்வி ரீதியான சமூகப் பிரிவினை காரணமாகத் தோன்றிய. சமூக அரசியல் பொருளாதார வேறுபாடுகள் மீதான எதிர்ப்பு விளைவு என்பவற்றைச் சுதேச மொழி இயக்கம் பிரதிபலித்தது. இதற்கு மேலாக மக்கள் ஆங்கிலக் கல்விக்கெதிராகக் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கினர். தாய் மொழியினைப் புறக்கணித்து, ஒரு அந்நிய மொழியில் கல்வியை அளிப்பது மூலம் ஆங்கிலப் பாடசாலைகள், வளர்ச்சியடைந்த முழுமனிதனாக வருவதற்கு இன்றியமையாத மாணவனின் ஆளுமை, சுயமாகக் கருத்து வெளிப்படுத்தும் ஆற்றல் என்பவற்றை சுதேச மொழிபேசும் மாணவர்க்கு வழங்க மறுக்கின்றன என்று வாதிட்டனர். ஆங்கிலத்தில் சிந்தித்து அத்துடன் அதில் என்ன கற்பிக்கப் படுகின்றது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டியிருப்பது மாணவர்க்கு இரட்டைச் சுமையாகின்றது. இதன் காரணமாக மாணவர்கள் வெறுமேன மனப்பாடம் செய்பவர்களாகின்றனர். மொழி என்பது மக்களின் உயிர் நாடி, அதனை மக்களிடமிருந்து பிரிப்பது, சமூகத்தின் உயிரோட்டத்தை நசுக்குவதாகவோ, அழிப்பதாகவோ அமைவதுடன் அதன் சிந்திக்கும் திறனையும் இல்லாமல் செய்வதைப் போன்றதென எதிர்க்கருத்துக்கள் வரத் தொடங்கின.

தொடரும்...

## அட்டைப் படம்

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உலக சமய பேரவை சொற்பொழிவின் நூற்றாண்டு விழா (*11 – 09 – 1893— 11 - 09 - 1993*) கொண்டாடப்படும் இவ்வேளையில் அன்னாரது திரு உருவப் படத்தினை அட்டையில் வெளியிட்டுள்ளோம்.

# உறவு என்னும் உலகங்கள் நீ தந்தது......

## 7. பிரிவு என்னும் ஒரு துன்பம்..........

❋ காந்த் ❋

''அவிம்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளிந்த சொல்
தேறியார்க்குண்டோ தவறு'' (குறள் 116 புரியாமை)

பல்கலைக் கழகமென்ற புதிய உலகிற்கு இளஞ் சிட்டுகளாய் பறக்கவந்த புதிய மாண வர்களை ''ராகிங் என்ற புயல் மோதிற்று. ஆனால் ராதாவின் இலட்சியப் பாதைக்கு முன்னால் இவையெல்லாம் ஒரு கேலிக் கூத் தாகவே அமைந்தன. ராதாவும் சுரேஷும் வேறு பீடங்களில் கல்வியை மேற் கொள்வ தால் அடிக்கடி இருவரும் சந்திக்க வாய்ப்பில் லாமற் போனாலும், மாலை நேரங்கள் இவர் கள் சந்திப்பிற்காகவே காத்துக்கிடந்தன.

ஆரியக் கூத்தாடினாலும் தன் காரியத் திற்கண்ணாயிருந்து 1ம் வருட பரீட்சையிலே மிகவும் திறமையாகச் சித்தியடைந்தாள் ராதா. ஆனால் சுரேஷால் சாதாரண சித்தி யைத்தான் பெறமுடிந்தது, பரீட்சை முடிவு களைப் போலவே அவர்களது உறவும் விரி சலடைய ஆரம்பித்தது. சுரேஷுடன் பயின்று கொண்டிருந்த 'சுதா' என்பவள் சுரேஷின் மீது தன் பார்வையைச் செலுத்த ஆரம்பித் தாள். சுரேஷ், ராதா இருவரிடமும் நற்பெய ரைப் பெற்ற அவள் ராதாவின் தோழியாக வும் மாறிவிட்டாள். ராதா சுரேஷை விடுமி டத்திலிருந்து சுதா ஆரம்பித்தாள்.

பரீட்சை விடுமுறையில்வீடுசென்றுதிரும் பிய சுரேஷ் ராதாவுக்கு அன்பளிப்புப் பார்சல் ஒன்றைக் கொண்டு வந்து 'ராதா! என் கனவில பாதிய நனவாக்கிட்ட! மீதியையும் ..' என்று கூற 'எல்லாம் நீங்கள் போட்ட பிச் சைதான் சுரேஷ்' என்றாள் ராதா '' உனக்கு இதோ எனது அன்பளிப்பு'' என்று தன் கையில் வைத்திருந்த சூட்கேஸ் போன்ற ஒரு பொருளை அவளிடம் நீட்டினான். 'தாங்க்யூ' என்றவாறு அவனைக்கட்டிப்பிடித்து பதிலுக்கு முத்தத்தை வழங்கினாள் ராதா. ராதா! இது சிங்கப்பூரிலிருந்து எனது மாமா எனக் காக வாங்கிவந்தது. இதில ரேடியோ ரேப் ரெக்கோடர் ரிவி, இசைத்தட்டு சுழலவிடும் கருவி எல்லாமே உண்டு வா! உன் அறைக் குப்போய் இதை இயக்கும் முறையைக் காட் டித்தாறன்' என்றவாறு அவளை அவளது அறைக்குக் கூட்டிச் சென்றான் சுரேஷ். புதிய கசற் ஒன்றை அதிலே இயங்க விட்டதும் அந்த இசையிலே ராதா தன்னையும் மறந்து நின்றாள்.

மீண்டும் வகுப்புகள் ஆரம்பித்தன. ராதாவின் திறமையையறிந்து சகமாணவர் கள் மாணவர் சங்கம், இந்து மன்றம், கலா மன்றம் உட்பட சகல மன்றங்களுக்கும் தலை மைப் பதவியை அலங்கரிக்க வைத்தனர். படிப்பும் படிப்பு தவிர்ந்த நேரங்களில் பொது சேவையும் ராதா சுரேஷை சந்திக்கும் நேரங் களை மெல்லமெல்ல விழுங்க ஆரம்பித்தன. தினசரி சந்தித்த அவர்கள் வார இறுதிகளில் மட்டுமே சந்தித்தனர். இந்த இடைவெளியை சுதா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி சுரேஷை அடிக்கடி சந்தித்து சந்தோசப் படுத்தி வந்தாள்.

''ராதா! இன்று கண்டியிலே ஒரு நல்ல படம் ஓடுகிறது போய்ப்பார்ப்போமா?'. என்று சுரேஷ் கேட்டதும் 'சாரி... சுரேஷ்!

இன்று எனக்கு இந்து மாணவர் மன்றக் கூட்டம்...'' என்று ராதா சொல்ல 'உனக்கு இப்பொழுது என்னைவிட எல்லாமே முக்கியமாகப் போய்விட்டது! என்ன?, என்று ஆத்திரத்துடன் கூறிய சுரேஷ் ஒன்றுமே சொல்லிக் கொள்ளாமல் படத்திற்குப் புறப்பட்டான். வழிமேல் விழி வைத்துக் காத்து நின்ற சுதா ''சுரேஷ் படத்துக்குத்தானே போறீங்க! நானும் வரட்டுமே'' என்று கேட்டாள் ''அவள்தான் மறுத்து விட்டாள்! நீயாவது வா!'' என்று அவளை அழைத்துக் கொண்டு பேருந்து தரிப்பிடத்தை நாடி நடப்பதை ராதா கவனிக்காமல் இல்லை. அன்றிலிருந்து ஒரு சில வாரங்கள் இருவரும் சந்திக்கவேயில்லை. ஆனால் சுதாவோ சுரேஷை அடிக்கடி சந்தித்து அவனுடன் பொழுதைக் கழித்து தன் திட்டத்தை வெளியிட சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இன்று எப்படியாவது அவளைச் சந்திக்க வேண்டும்' என்று மனதில் நினைத்துக் கொண்ட சுரேஷ் ராதாவைத் தேடிச் சென்றான். அவளது துரதிஷ்டம் அன்றும் ஏதோ மாணவர் 'ராகிங்' பிரச்சனை சம்பந்தமாக மாணவர் அவை நிர்வாகக் குழு கலந்தாலோசனை நிகழ்த்திக் கொண்டிருந்தது அறைக்கு வெளியிலே ராதாவுக்குத் தெரியும்படி நின்றான் சுரேஷ். கூட்டம் நடக்கும் போது இடையில் விட்டுச் செல்வது அழகல்ல என்று நினைத்த ராதா இருதலைக் கொள்ளி எறும்பாகத்துடித்தாள்.

வெளியிலே தனக்காகக் காத்து நிற்கும் சுரேஷை சந்தித்து தன் மனதிலே உள்ளவற்றையெல்லாம் சொல்லி அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அவள் என்ன செய்வாள்? எழும்பி வந்தால் திரும்பிப்போக அவன் விடமாட்டான் என்றும் தெரியும், கூட்டத்தை முடிப்போமென்றால் பிரச்சனை மேலும் மேலும் விஸ்வரூபமெடுக்க ஆரம்பிக்கிறது. பொறுமையை இழந்த சுரேஷ் அங்கிருந்து புறப்பட ஆரம்பிக்க அவனது தோளை இருமென்கரங்கள் தழுவின.

(தொடரும்...)

## சிந்தனைச் சிதறல்கள்

| | | |
|---|---|---|
| இடம் பார்த்து சிரிப்பவன் | — | எத்தன் |
| இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் | — | கோமாளி |
| கண்பார்த்துச் சிரிப்பவன் | — | காரியவாதி |
| காணாமல் சிரிப்பவன் | — | கஞ்சன் |
| கற்பனையில் சிரிப்பவன் | — | கவிஞன் |
| கோபத்தில் சிரிப்பவன் | — | சிந்தனையாளன் |
| மோகத்தில் சிரிப்பவன் | — | வெறியன் |
| நீதியோடு சிரிப்பவன் | — | அறிஞன் |
| நினைவோடு சிரிப்பவன் | — | வறிஞன் |
| நிலை மறந்து சிரிப்பவன் | — | காதலன் |
| நின்று சிரிப்பவன் | — | நினைவுள்ளவன் |
| மகிமையில் சிரிப்பவன் | — | மன்னன் |
| மாண்பில் சிரிப்பவன் | — | பண்பாளன் |
| செயல் கேட்டு சிரிப்பவன் | — | பச்சோந்தி |
| அருளுக்கு சிரிப்பவன் | — | ஆண்டி |
| கூட்டத்தில் சிரிப்பவன் | — | சாமர்த்தியன் |
| குழைந்து சிரிப்பவன் | — | சந்தர்ப்பவாதி |
| வளையாமல் சிரிப்பவன் | — | உதவாக்கரை |
| கொடுக்கும் போது சிரிப்பவன் | — | சூழ்ச்சிக்காரன் |
| துன்பத்தில் சிரிப்பவன் | — | மனிதன் |

தொகுப்பு: **K. R. கோபால்**

# நாட்டார் வாயில் நயம் 1

## நமக்கெதுக்கு நாக்கிழிப்பு

எழுதியவர்: எஸ். இளையதம்பி

பார்வதியின் வீடு தெருவோரமாகத்தான் இருக்கிறது. சிறு குடிசை. தெருவோரமாக உயரமான வேலிகட்டி மறைக்கப்பட்டிருக்கிறது. செங்கமலம் பார்வதியின் ஒரேயொரு மகள். பருவமடைந்தவள். நாளாந்தம் காலை நேரத்தில், தெருவோரமாக உள்ள முன் வாசலைக் கூட்டித்துப்பரவு செய்வதில் அவளுக்குத் தீவிர கவனமிருந்தது.

முருகன் ஒரு வாலிபன். அவன் நாளாந்தம் அத்தெரு வழியால் காலையில், தன் தொழிலுக்குச் செல்வது வழக்கம். வேலி உயரமாக இருந்தாலும், முருகன் அத்தெருவால் போகும் போது, அவன் கழுத்துக்கு மேற்பாகமான முகம் செங்கமலத்தைப் பார்க்கத் தவறுவதேயில்லை. செங்கமலத்துக்கும் அவ்வாறான செயல்தான். காலையில் தனக்கு முன் முற்றம் கூட்ட வாய்ப்புக் கிடைத்தது, இப்போது அவளுக்குச் சொர்க்கலோகம் கிடைத்ததுபோல் இருந்தது. ஆரம்பத்தில் கண்களால் மட்டும் கலந்த காதல், வளர்ந்து மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் பார்வதி திடீரெனப் பாடுகிறாள்;

'' றோட்டுப் பக்கம் நீ இனிமேல்
கூட்டுறத்த உட்டுப்போடு
நாட்டுவச நானறிவேன்
நமக்கெதுக்கு நாக்கிழிப்பு. ''

செங்கமலம்! அடியே செங்கமலம்!!
என்னம்மா! ஏன் கூப்பிடுறியள்.
இனிமேல் நீ காலையில றோட்டுப் பக்கமாகக் கூட்டும் வேலய வெச்சிக்காத கேட்டுதா.
ஏனம்மா திடீரென்று?
அதப் புறகு சொல்றன், முதலில இப்ப நீ இங்கால வா.
சரியம்மா - இந்தா வாறன்.

இவ்வாறாகத் தாய்க்கும், மகளுக்கும் வார்த்தைகள் வளர்ந்து முடிவடைகின்றன.

இந்தக் காதலர்களைப் பற்றிய கதை ஊருக்குள் கிசுகிசுக்கத் தொடங்கியது. இது பார்வதியின் செவியிலும் ஏறியது. ''நாட்டு நிலை நானறிவேன் நமக்கெதுக்கு நாக்கிழிப்பு'' என்று சுருக்கமாகவும், எளிமையாகவும் கூறி மகளைக் கட்டுப்படுத்துகிறாள்.

நாட்கள் சில கடந்தன. முருகனும், செங்கமலமும் சந்தித்துக் களிக்க வாய்ப்புக் கிட்டவில்லை. தன் காதலன் சிந்தனையிலே மூழ்கி இருந்த அவள், கற்பனை செய்து பாடுகிறாள்;

'' நெற்றிக்கு நேரே
நிலாக் கிழம்பி வாறது போல்
வேலிக்கு மேலாலே மச்சாண்ட
வெள்ள முகம் காண்பதெப்போ ''

ஆகா, இவள் பாடலில் எவ்வளவு அற்புதமான உவமை அணி. கடல் மட்டத்திலேயிருந்து, உதயமாகும் பூரண நிலவைப் பார்ப்பதுபோல, இந்த வேலி மட்டத்திலேயிருந்து உதயமாகும் மச்சானின் முகத்தை எப்போது காணப்போகிறேன் என்று அழகெடுத்துக் கூறுகிறாள். கவியரசு கம்பனையும் மிஞ்சிவிட்டது செங்கமலத்தின் கற்பனை. பாட்டைக்கேட்டபடியே நடந்து போய்க்கொண்டிருந்த முருகனுக்கு, இரக்கமும், கவலையும் இரண்டறக் கலந்தது.


'' பூட்டிவெச்ச பெட்டகமே
பொட்டகத்துள் ரெத்தினமே
பார்த்துப் பருகிய கண்
பாழடைந்து போகுதுகா ''

முருகனும் தன் காதலியின் அழகை விட்டுவைக்கவில்லை. தகதகவென்று ஒளிவீசும் இரத்தினமே என்று தனது காதலியை இரத்தினமாகவே உருவகப் படுத்திவிட்டான். என் கண்படாமலும், உன் காற்று வீசாமலும் இருக்க ரெத்தினத்தையே பூட்டிவைத்தாற் போல நீ அடைபட்டுக் கிடக்கிறாயே; என்று ஏங்குகின்றான். உன்னைப் பார்த்து ஆனந்தமடைந்த என் கண்கள் காணாததால் இருண்டுகொண்டே போகிறது. இறுதியில் இந்த உலகமே இருண்டுவிடும் என்பதை ''பார்த்துப் பருகிய கண் பாழடைந்து போகுதுகா'' என்று இனிமையாக எடுத்துக் கூறுகிறான்.

இதன் தொடர்ச்சி 28ம் பக்கம் பார்க்க

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 5

## பிரவேசப்பத்திரம்



பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

கையொப்பம்: ..............................

இப்பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப் படும்.

இங்கே வெட்டவும்

### இடமிருந்து வலம்

1. பெருங்காயம்.
6. பழம்பெரும் நடிகரின் 2ம் எழுத்தைக்காணவில்லை.
7. வழிகாட்டு.
10. .........செய்த சதி.
12. நடுவிடம்.
13. மரக்கலங்கள் தரித்து நிற்கும் இடம் ஆங்கிலச்சொல்.
14. அச்சம் 3ஆம் எழுத்து மறைய குழம்பி விட்டது.
15. பிரயோசனப்படு 1ம், 2ம் எழுத்துகள் மாறிவிட்டன.
17. தவறு 3ம் எழுத்து மறைந்து விட்டது.
18. ஒரு வகை மது குழம்பி விட்டது.
19. கிளி.
21. பறவையை முதலில் கொண்ட ஒருபெண்ணின் பெயர் குழம்பிவிட்டது.

### மேலிருந்து கீழ்

1. தூதுவளை.
2. மாட்டு நோய் வகை,
3. ......முரடான பாதை குழம்பி விட்டது.
4. மகனின் மகனை இப்படி விளிக்கலாம்.
5. அரசர் முதலியோர் அணியும் சிறந்த அணிகலன்.
8. வகுப்பறை, சமையலறை 3ம்,4ம்எழுத்து மறைய தலைகீழாகிவிட்டது.
9. வீரத்தின் கடவுள்.
11. பேசு (ஏசு)
16. சைக்கில்களில் தோட்டாக்களில் பாவிக்கப்பட்டதால் குழம்பி விட்டது.
17. மரத்துள் மறைந்த யானை தலை கீழாகி விட்டது.
20. எட்டு இறுதி எழுத்து மறைய குழம்பி விட்டது.

முடிவு திகதி: 15 - 10 - 93

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 4 முடிவுகள்

**சரியான விடைகள் :**

இடமிருந்து வலம்

1. கரகரப் பிரியா
6. மதர்
7. சிலப்பதிகாரம்
10. பூவையர்
11. கற்றூரம்
12. கத்தி
14. வறை
15. தியாமம்
16. ஆலயம்
17. சின்னம்

மேலிருந்து கீழ்

1. கமலக்கண்ணன்
2. ரதம்
3. கர்ப்பூரவள்ளி
4. பிடாரவைத்தியன்
5. யாத்திரகமம்
8. பயற்றை
9. கார்
13. தியாலம்
16. ஆசி

போட்டியில் பல வாசகர்கள் கலந்து கொண்டார்கள். அனைவரினதும் முயற்சிக்கு எமது பாராட்டுக்கள். அவற்றுள் முழுக்க முழுக்கச் சரியாக இரண்டே இரண்டு பத்திரங்கள் மட்டுமே இருந்தன. அவற்றுள் பரிசு பெறும் ஒழுங்கு:

**1ம் பரிசு ரூ. 50/- — பெறுபவர்:**

திரு. P. பகிரதன்
மே/பா, E. பேரின்பநாயகம்
மக்கள் வங்கி வீதி,
களுவாஞ்சிக்குடி.

**2ம் பரிசு ரூ. 30/- — பெறுபவர்:**

திரு. சு. தேவராஜ்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.

---

இப்பாடலைக்கேட்ட செங்கமலம் ஆசை மேலீட்டால் ஓடிப்போய்க் காதலனைக் காண வேண்டுமென்று உள்ளம் உந்தியது. ஆனால் தன் தாயாரின் கட்டுப்பாடான எச்சரிக்கை தடுத்தது. விம்மலும் பொருமலும் வெளிப்பட்டது. நெஞ்சம் வெடித்து விடுவதுபோல் தோன்றிற்று. எனவே தன் தலை குனிந்து நெஞ்சை நோக்கினாள். சிந்தித்தாள் வாயிலிருந்து வந்தது பாடல்;

"மச்சானுக்காக
வளர்த் தெடுத்த செவ்விளனீ (ர்)
பிச்சி பத்திப் போகாமப்
பெருமானே காக்க வேணும்"

முருகனிலே தனக்குள்ள காதலன்பை எத்தனை அற்புதமாக எடுத்துக்காட்டி நம்ப வைக்கிறாள். "மச்சானுக்காக வளர்த்தெடுத்த செவ்விளனி" என்பதில் உள்ள இனிமை, அவளது மேலான காதலை வெளிப்படுத்தி நிற்கிறது. தன் காதல் உணர்வுகளை மச்சானிடமே அடைக்கலம் அளித்துவிட்டாள்" என்பதைக் குறித்து "செவ்விளனீ பிச்சி பத்திப் போகாமப் பெருமானே காக்கவேணும்" என்பதிலிருந்து, தனது ஆசை நிறைவேற இறைவனே கருணை காட்டவேண்டும் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.

மங்கையர் உள்ளங்களை மகிழ்விக்கும்
அழகுசாதன, ஆடம்பரப் பொருட்களை,
கண்ணைக்கவரும் வண்ண வண்ண
கூறைச் சேலைகளை, பட்டுவேட்டி சால்வைகளை,
சகல வித துணிமணிகள், தைத்த உடைகளை,
கைக்கடிகாரம், செருப்பு வகைகளை
குறைந்த விலையில் பெற
நாடவேண்டிய இடம்

## அம்பிகா ரெக்ஸ்

**பிரதான வீதி,**
**செங்கலடி.**

சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்களையும்,
மருந்து வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
**வாழைச்சேனையில் நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்**

## நஹுவியா ரேடர்ஸ்

**பிரதான வீதி,**
**வாழைச்சேனை.**

*For all Household goods and Drugs*

*VISIT*

## NAHUVIYAH TRADERS

MAIN STREET,
VALAICHENAI.

☎ 065 - 7294

அழகிற் சிறந்த நகைகளுக்கு . . .

# ஸ்ரீ கிருஷ்ணா



★ நம்பிக்கை

★ நாணயம்

★ நேர்மை



இவற்றிற்கு இன்றே நாடுங்கள்

## ஸ்ரீ கிருஷ்ணா கோல்ட் ஹவுஸ்

53 B, பிரதான வீதி, செங்கலடி.

தொலைபேசி: 2881

அழகிற் சிறந்த நகைகளுக்கு

# மோகனா



★ நம்பிக்கை !

★ நாணயம் !!

★ நேர்மை !!!



இவற்றிற்கு இன்றே நாடுங்கள்

## மோகனா ஜுவலஸ்ஸ்

அடவு பிடிக்கும் இடம்

சுப்பர் மார்க்கட், செங்கலடி.

இச் சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டு கிழக்கொளி ஆசிரியர் குழுவினரால் 09-09-93ல் வெளியிடப்பட்டது.